DEVELOPMENT LOTTERY
Enriching Your Life

# வென்றெடுப்போம்

## மக்கள் மனதை

# 2016

ஆண்டறிக்கை

அபிவிருத்தி லொத்தர் சபை

# அறிமுகம்

எமது பயணமானது, ஆரம்பத்திலிருந்தே, இலங்கை மக்களுடன் இணைந்ததாகவே அமைந்திருந்தது. எமது வர்த்தக நடவடிக்கைகளான அதிஷ்டச் சீட்டிழுப்புக்கள் அனைத்தும், இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்புவதையும், வறுமை ஒழிப்புக்கு பங்களிப்பை வழங்குவதையும், கல்விக்கான சந்தர்ப்பங்களை அபிவிருத்தி செய்வதையும் இலக்குகளாகக் கொண்டுள்ளன. 2016 ஆம் ஆண்டில் எமது சாதனைகளை மீளாய்வு செய்கையில், எமது முன்னேற்றம், எமது எதிர்கால வழிமுறைகள், நாடு முழுவதிலுமுள்ள இலங்கை மக்களுக்கு அதிகாரமளிக்கும் எமது நடவடிக்கைகள் என்பன பற்றிக் கலந்துரையாடுவதில் மட்டடற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| கூட்டுறவுத் தகவல்கள் | 4 |
| அபிவிருத்தி லொத்தர் சபையின் வரலாறு | 6 |
| மைல்கற்கள் | 8 |
| நிதிசார் முக்கிய குறிப்புகள் | 10 |
| தலைவரின் செய்தி | 12 |
| பணிப்பாளர் சபை (2015) | 14 |
| பணிப்பாளர் சபையின் மீளாய்வு | 15 |
| முகாமைத்துவக் குழு | 16 |
| செயற்பாட்டு மீளாய்வு | 18 |
| தங்குதிறன் அறிக்கை | 27 |
| கூட்டுறவு ஆளுகை | 32 |
| இடர் முகாமைத்துவ அறிக்கை | 34 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை | 36 |


## நிதி அறிக்கைகள்


| | |
|---|---|
| சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை | 38 |
| விரிவான வருமானக் கூற்று | 77 |
| நிதி நிலை தொடர்பான கூற்று | 78 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 79 |
| பங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கான கூற்று | 80 |
| நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் | 81 |
| பத்து வருடகால தொகுப்பு | 95 |

# கூட்டுறவுத் தகவல்கள்

## சபையின் பெயர்
அபிவிருத்தி லொத்தர் சபை

## சட்ட வடிவம்
1997 ஆம் ஆண்டின் பாராளுமன்றத்தின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் கீழ் இந்த சபை சட்டபூர்வமாகக் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

## ஆரம்பிக்கப்பட்ட திகதி
1983 ஜனவரி 19

## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

## தொலைபேசி
011 2 333 546-8, 011 4 824 824

## தொலைநகல்
011 2 333 545

## மின்னஞ்சல்
devlottr@slt.lk

## இணைய தளம்
www.dlb.lk

## TIN
409089844

## பணிப்பாளர் சபையினர் (2016)
- திரு. ரொமேஷ் ஜயவர்தன - தலைவர் / பிநிஅ
- திருமதி ஆர்.ஐ.விமலசேன - உப தலைவர்
- திரு. டி.என்.நாணயக்கார - பணிப்பாளர்
- டொக்டர் விக்கிரம வீரசூரிய - பணிப்பாளர்
- திரு. எம்.எஸ்.டி.ரணசிறி - பணிப்பாளர்

## தற்போதைய பணிப்பாளர் சபையினர்
- திரு. எஸ்.ஏ.பி.சூரியப்பெரும - தலைவர் / பிநிஅ
- திரு. எச்.ஆர்.விமலசிரி - செயலாற்றுப் பணிப்பாளர்
- திரு. டி.என்.நாணயக்கார - பணிப்பாளர்
- திரு. எச்.ஜீ.சுமனசிங்க - பணிப்பாளர்
- திரு. டி.சி.திசாநாயக்க - பணிப்பாளர்

## கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் நாயகம்

## வங்கிகள்
மக்கள் வங்கி, இலங்கை வங்கி, சம்பத் வங்கி பிஎல்சி

# எமது நோக்கு

இலங்கையில் அதிஷ்டத்தை வாரி வழங்கும் ஒரு முதன்மை பொது நிறுவனமாக விளங்குதல்.

# எமது குறிக்கோள்

பங்காளிகளின் அபிலாஷைகளை சகல வேளைகளிலும் பூர்த்தி செய்வதில் நம்பிக்கைக்கு முதலிடமளித்து தலைசிறந்த நிறுவனமாக விளங்கி, அதிநவீன தொழில்நுட்பத்தை உபயோகித்து, கவர்ச்சிகரமான புதிய அதிஷ்டலாபச் சீட்டு லொத்தரை நடத்துதல்.

## எமது முதன்மைப் பெறுமானங்கள்

### நேர்மை

நாம் வழங்கும் அதிஷ்டச் சீட்டுக்களும், சீட்டிழுப்பை நடத்தும் விதமும், நீதியானதும், கௌரவமானதும், நம்பிக்கையானதும் ஆகும்.

### ஆக்கபூர்வமான நிலைமை

அபிவிருத்தி லொத்தர் சபையின் சேவையாளர்கள், சீட்டிழுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, தாங்கள் எதிர்நோக்கும் ஒவ்வொரு சவால்களுக்கும் ஆக்கபூர்வமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றனர்.

### பெறுபேறுகளின் பாரம்பரியம்

அபிவிருத்தி லொத்தர் சபை சேவையாளர்கள், தங்களது கடமைகளில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளதோடு, தரப்பட்ட இலக்குகளை ஆக்கபூர்வமான முறையில் பெறுவதற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

# எமது இலக்கு

சந்தையில் எமது பங்கீட்டை அதிகரித்தல், ஜனாதிபதி நிதியத்திற்கு உச்சக்கட்ட பங்களிப்பை வழங்குதல், நவீன தொழில்நுட்பத்தைப் பெற்று நற்பயன்தரும் வகையில் உபயோகித்தல். பங்காளிகளின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்தல்.

### புதிய வழிமுறைகள்

அபிவிருத்தி லொத்தர் சபையின் சேவையாளர்கள், வர்த்தக நடவடிக்கைகளை மேம்படச் செய்யும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும்படி ஊக்கமளிக்கப்படுவதோடு, முக்கியத்துவம் வாய்ந்த, போட்டி அடிப்படையிலான சந்தை மாற்றங்களை ஈடு செய்யவென தீர்மானம் மேற்கொண்டு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளும்படி ஊக்கமளிக்கப்படுகின்றனர்.

### குழு அடிப்படையிலான வேலை

அபிவிருத்தி லொத்தர் சபையின் சேவையாளர்கள், அதன் இலக்குகளை அடைவதற்கென இணைந்து பணிபுரிவதோடு, வெளிப்படைத்தன்மைக்கும், பரஸ்பர மரியாதைக்கும் ஆதரவளித்து, தனிநபர் மேம்பாடு, அதிவிசேட நிலைமையை நோக்கிச் செயற்படுகின்றனர். சேவையின் தரத்தை உச்சக் கட்டத்தில் வைத்திருப்பதற்கு அவர்கள் தொடர்ந்து பாடுபடுகின்றனர்.

### அதிவிசேட நிலைமையை நோக்கிய பாரம்பரியம்

சேவையின் தரத்தை உச்சக்கட்டத்தில் பேணுவதற்கு சேவையாளர்கள் தொடர்ந்து விடாமுயற்சி மேற்கொள்கின்றனர்.

# வரலாற்றினூடாக ஒரு பார்வை

அபிவிருத்தி லொத்தர் சபையின் (ஆரம்பத்தில் அபிவிருத்தி லொத்தர் நிலையம் என அழைக்கப்பட்டது) முக்கிய இலக்கு, ஜனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் என்பனவற்றுடனான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நெருங்கிய தொடர்புகளின்



பலனாக ஏற்பட்ட கல்வி அபிவிருத்தி, வைத்திய உதவிகளுக்கான அனுசரணை என்பனவாகும். பலதரப்பட்ட தேசிய, பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத் திட்டங்களுக்கு நிதி வழங்கவென வருமானத்தை உருவாக்கும் நிலைபேறான வழிமுறை ஒன்றை ஆரம்பிப்பதற்கு டொக்டர் விக்கிரம வீரசூரிய சிந்தித்த சமயம், உடனடி அதிஷ்டச் சீட்டுத் திட்டத்தை ஆரம்பிக்க பல்வேறு அரசாங்க, தனியார் அமைப்புக்களிடமிருந்து உதவிகளைக் கோரியிருந்தார். இருந்த போதிலும், ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன மற்றும் அமைச்சர்



லலித் அத்துலத்முதலி ஆகிய இருவரிடமிருந்தும் ஆக்கபூர்வமான உதவிகள் கிடைக்கப் பெற்றன. இவர்கள் ஒவ்வொருவரும் 1.5 மில்லியன் ரூபாவை வழங்கி, அபிவிருத்தி லொத்தர் நிலையத்தை ஆரம்பிக்க உதவினார்கள். நிதியத்தின் உண்மையான தொலைநோக்கிற்கு ஏற்ற வகையில், விற்கப்பட்ட முதலாவது அதிஷ்டச் சீட்டு “அபிவிருத்தி லொத்தர்” எனக் குறிப்பிடப்பட்டு, 1983 ஜனவரி 19 ஆம் திகதியன்று அபிவிருத்தி லொத்தர் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது, ஒரு வருட காலத்தினுள் அபிவிருத்தி லொத்தர் நிலையம் மகோன்னத வெற்றியைப் பெற்றதோடு, பெருமளவு இலாபத்தையும் அடைந்தது. இந்த முயற்சியின் பங்காளிகள் என்ற வகையில், ஜனாதிபதி நிதியமும், மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியமும், இலாபத்தில் பெரும்பாலான பங்கைப் பெற்றுக்கொண்டன. இன்று வரை அபிவிருத்தி லொத்தர் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம், நாட்டு மக்கள் அனைவருக்கும் சுபீட்சத்தை வழங்கவென ஜனாதிபதி நிதியத்தில் சேர்க்கப்பட்டது, இதில் 50 சதவீதமான தொகை மகாபொல உயர்கல்விப் புலமைப் பரிசில் நிதியத்திற்கு வழங்குவதன் மூலம் நாட்டு மக்களின் உயர்கல்வி நடவடிக்கைகளுக்கு நிலைபேறான ஆதரவு வழங்கப்படுகின்றது.

1993 ஆம் ஆண்டில், அபிவிருத்தி லொத்தர் நிலையம். “அபிவிருத்தி லொத்தர் நம்பிக்கை நிதியம்” எனப் புனரமைக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் 1997



ஆகஸ்ட் 12 ஆம் திகதி “அபிவிருத்தி லொத்தர் சபை” ஆரம்பிக்கப்பட்டது. “அபிவிருத்தி லொத்தர்” என்ற பெயரில் முதன் முதலான உடனடி/சுரண்டல் லொத்தர் சீட்டுக்கள் ஒவ்வொன்றும் ரூபா 10/- என்ற அடிப்படையில் நாடளாவிய விற்பனையாளர் வலையமைப்பின் மூலம் விற்கப்பட்டன. 24 மணித்தியாலங்களுக்குள் இரண்டு ஜக்பொட் பரிசுகளை அதிஷ்டசாலிகள் வென்றெடுத்ததனால், அபிவிருத்தி லொத்தரின் ஜனரஞ்சகத் தன்மை நிரூபிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டில் தொலைக்காட்சி அதிஷ்டச் சீட்டிழுப்புக்கள் முதன் முதலாக அபிவிருத்தி லொத்தர் நிலையத்தினால் அறிமுகம் செய்யப்பட்டன. சனிக்கிழமைகளில் “ஷனிதா வாசனாவ” இடம்பெற்றதையடுத்து, புதன் கிழமைகளுக்கும் இது விஸ்தரிக்கப்பட்டது, தொலைக்காட்சி மூலமான அதிஷ்டச் சீட்டிழுப்பு ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்ற அதேசமயம், உடனடி சீட்டுக்களில் வெற்றி பெறாத சீட்டுக்களுக்கான “வாசனா சக்கரய” 1998 ஜனவரி 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அதிஷ்டச் சீட்டிழுப்பு நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பிரபல்யம்

அடைந்ததையடுத்து, “சன்வர்தன வாசனாவ” என்ற இரண்டாவது தொலைக்காட்சி அதிஷ்டச் சீட்டிழுப்பையும் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அபிவிருத்தி லொத்தர் சபை ஆரம்பித்தது. வெற்றி பெறும் சீட்டுக்களை அடையாளம் காணவென, இலக்கங்களுடன் இராசிகளின் அடையாளங்களும் இணைக்கப்பட்டன.

திங்கட்கிழமையும், வியாழக்கிழமையும் ஒளிபரப்பப் படவென, “ஜயோதா” என்ற அதிஷ்டச் சீட்டிழுப்பை அபிவிருத்தி லொத்தர் சபை 2004 ஜனவரி 26 இல் அறிமுகம் செய்தது. இந்த அதிஷ்டச் சீட்டு, சாதாரண ஜக்பொட்டுக்கு மேலதிகமாக “சுப்பர் ஜக்பொட்”டையும் வழமையான ரொக்கப் பரிசுகளையும் வழங்கியது. சுப்பர் ஜக்பொட், பூர்வாங்க வெற்றித் தொகையாக 10 மில்லியன் ரூபாவை வழங்குகிறது. இலங்கை அதிஷ்டச் சீட்டிழுப்பு அரங்கில், “ஜயோதா” ஜக்பொட் வெற்றியாளர்கள் ரூபா 01 மில்லியன் ரொக்கப் பரிசு அல்லது ரூபா 01 மில்லியனுக்கும் அதிகம் பெறுமதி கொண்ட வீட்டைப் பெறும் உரிமையைப் பெற்றுக் கொண்டார்கள்.

அபிவிருத்தி லொத்தர் சபை வியாழக்கிழமைக்கும் ஞாயிற்றுக்கிழமைக்குமென “ஜன ஜய” என்ற



அதிஷ்டச் சீட்டிழுப்பை 2009 ஏப்ரல் 10 ஆம் திகதி ஆரம்பித்தது. இதில் சுப்பர் பரிசை வென்றெடுக்க வேண்டுமானால், ஒருவர் மொத்தம் 64 இலக்கங்களில் நான்கு இலக்கங்களுடன் பொருந்தியிருப்பது முக்கியமாகும். மற்றொரு இயந்திரத்திலிருந்து 12 இலக்கங்களுக்குள் சுப்பர் இலக்கமும் தெரிவு செய்யப்படும்.

சுப்பர் ஜக்பொட் பூர்வாங்கத் தொகையான ரூபா 2.5 மில்லியனுடன் ஆரம்பமாகிறது. 2012 ஜுலை 11 ஆம் திகதி அறிமுகம் செய்யப்பட்ட “சுப்பர் போல்” அதிஷ்டச் சீட்டிழுப்பு, இந்தத் தொழிலில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. மாபெரும் ரொக்கப் பரிசான ரூபா 30 மில்லியனுடன் ஆரம்பிக்கும் இந்த அதிஷ்டச் சீட்டிழுப்பு, பொது மக்கள் மத்தியில் பெருமளவு பிரபல்யத்தைப் பெற்றுள்ளது.

2016 ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை புதிய பல அதிஷ்டச் சீட்டிழுப்புக்களை அறிமுகம் செய்தது. 2016 மே 14 ஆம் திகதி “சன்வர்தன லக்ஷபதி” என்ற அதிஷ்டச் சீட்டிழுப்பு அறிமுகம் செய்யப்பட்டதை அடுத்து, 5.6 மில்லியன்



அதிஷ்டச் சீட்டுக்கள் என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற விற்பனையும் பதிவு செய்யப்பட்டது. “கோட்டிபதி ஷனிதா” என்ற அதிஷ்டச் சீட்டிழுப்பு 2016 ஏப்ரல் 08 ஆம் திகதி அறிமுகம் செய்யப்பட்டதை அடுத்து. பூர்வாங்க சுற்று விற்பனையின் போது 4.4 மில்லியன் சீட்டுக்கள் விற்கப்பட்டன.

தொலைக்காட்சி அதிர்ஷ்ச் சீட்டிழுப்பான “சன்வர்தன வாசனாவ” 2016 டிசம்பர் 12 ஆம் திகதி முற்றிலும் புதிய முறையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு மூன்று ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

ஜனாபதி நிதியம் மற்றும் மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் என்பனவற்றுக்கு அபிவிருத்தி லொத்தர் சபையின் வருமானத்தில் ஒரு பகுதி வழங்கப்படுவதற்கு மேலதிகமாக, வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கென அவர்களுக்கு வருமானம் தரும் பல திட்டங்கள், பின்தங்கிய பகுதிகளிலுள்ள மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், சமயத் தலங்களின் பராமரிப்பு மற்றும் கலை, விளையாட்டுத்துறை என்பனவற்றின் மேம்பாட்டிற்கும் பங்களிப்பைச் செய்து வருகிறது.



லொத்தர் சீட்டிழுப்பு பரிசு வழங்கும் வைபவத்தில் கௌரவ நிதி அமைச்சர்

# மைல்கற்கள்

**1987**

"சனிக்கிழமை அதிர்ஷ்டம்" மூலம் தொலைக்காட்சி ஊடாக முதலாவது லொத்தர் சீட்டிழுப்புக்களின் அறிமுகம்

**1993**

"அபிவிருத்தி லொத்தர் நிலையம்" "அபிவிருத்தி லொத்தர் நிதியமாக" உருமாற்றம் பெறல்

**1997**

1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், அபிவிருத்தி லொத்தர் சபையின் "அபிவிருத்தி லொத்தர் நிதியம்", "அபிவிருத்தி லொத்தர் சபை" என அரசுக்குச் சொந்தமான ஒரு கூட்டுறவு நிறுவனமாக உருமாற்றம் பெற்றது.

- சாதனை படைக்கும் ரூபா இரண்டு பில்லியன் வருமானம்

**1998**

பரிசுகள் வெல்லப்படாத உடனடி டிக்கட்டுக்களுக்கான "வாசனா சக்கரய" தொலைக்காட்சி நிகழ்ச்சி அறிமுகம். "வின்டோஸ்" உடனடி லொத்தர் மற்றும் "யூரேகா" உடனடி லொத்தர் என்பன ரூபா 100/- பெறுமதியுடைய லொத்தர் சீட்டிற்கு ஆடம்பர சொகுசு கார்களை பரிசுகளாக வழங்கின.

**1999**

உலக வங்கியின் நிதி உதவியுடன், Y2K சிக்கல்களைச் சமாளிக்க கணனி முறைமை மேம்படுத்தப்பட்டது.

**2004**

பணப் பரிசுகளை அல்லது வீடு ஒன்றைப் பரிசாக வழங்கும் “ஜயோதா” சீட்டு அறிமுகம்.

- சாதனை படைக்கும் ரூபா மூன்று பில்லியன் வருமானம்.

**2008**

இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 02 இல் அமைந்துள்ள தனது சொந்தக் கட்டடத்திற்கு இடம் மாறல்.

- சாதனை படைக்கும் ரூபா ஐந்து பில்லியன் வருமானம்.

**2010**

சுப்பர் ஜெக்பொட் பரிசுடன் “ஜன ஜய” புதிய லொத்தர் சீட்டு அறிமுகம்.

**2011**

“நியத்த ஜய” லொத்தர் சீட்டு அறிமுகம்.

**2012**

பிரமாண்டமான ரூபா 30 மில்லியன் பரிசுத் தொகையுடன் “சுப்பர் போல்” லொத்தர் சீட்டு அறிமுகம்.

**2013**

பெறுமதிமிக்க ஜக்பொட் பரிசுத் தொகையுடன் “ஹைவே டிரீம்” அறிமுகம்.

**2014**

“குறுந்தகவல்கள்” மூலம் லொத்தர் சீட்டு விற்பனை அறிமுகம்.

**2016**

“சன்வர்தன லக்ஷபதி”, “கோட்டிபதி சனிதா” மற்றும் “சன்வர்தன வாசனாவ” லொத்தர் சீட்டுக்கள் அறிமுகம்.

# நிதித்துறை முக்கிய விடயங்கள்

மொத்தச் சொத்துக்கள்




மொத்த இலாபம்




வரிக்கு முந்திய இலாபம்




வரிச் செலவுகள்




வருமானம்




ஜனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு



| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | 2016 | 2015 |
|---|---|---|
| செயற்பாட்டுப் பெறுபேறுகள் | | |
| வருமானம் | 14,759,875,240 | 11,874,659,603 |
| நிகர இலாப அளவு | 6,236,580,852 | 5,137,214,449 |
| வரிக்கு முந்திய இலாபம் | 2,700,522,768 | 2,389,616,614 |
| வரிச் செலவுகள் | 917,136,130 | 662,552,875 |
| நிகர இலாபம் | 1,783,386,637 | 1,727,063,739 |
| ஜனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு | 1,836,020,000 | 1,628,053,000 |
| | | |
| நிதியியல் நிலைமைக் கூற்று | | |
| சொத்துக்கள் | | |
| சொத்துக்கள், பொறி மற்றும் ஆதனங்கள் | 699,667,579 | 730,360,335 |
| முதிர்ச்சியடையும் நிதிச் சொத்துக்கள் | 673,087,288 | 807,514,816 |
| பதிவேடுகள் | 39,733,884 | 32,603,696 |
| வர்த்தகக் கடனாளிகளும் ஏனைய பெறுகைகளும் | 65,861,572 | 27,905,721 |
| முற்கொடுப்பனவுகளும் வைப்புக்களும் | 6,402,121 | 5,631,264 |
| வங்கி மற்றும் கையிலுள்ள காசு | 572,045,926 | 338,946,957 |
| மொத்த சொத்துக்கள் | **2,056,798,369** | **1,942,962,790** |
| | | |
| பொறுப்புக்கள் | | |
| ஊழியர் நலப் பொறுப்புக்கள் | 31,004,453 | 30,303,482 |
| முகவர் மற்றும் விநியோகத்தருக்கான செலுத்த வேண்டிய வைப்பு | 30,696,381 | 28,380,381 |
| கடன் வவுச்சர் செலுத்துகை | 101,500,760 | 203,705,730 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 576,301,096 | 434,266,902 |
| ஜனாதிபதி நிதியத்திற்கான செலுத்துகை | -52,633,363 | 99,010,739 |
| பரிசுகளுக்கான கொடுப்பனவு | 560,093,693 | 208,869,321 |
| | | |
| பங்குகள் | | |
| ஜனாதிபதி நிதியம் | 2,200,000 | 2,200,000 |
| மகாபொல நம்பிக்கை நிதியம் | 2,200,000 | 2,200,000 |
| பரிசுகளுக்காக ஒதுக்கப்பட்ட கணக்கு | 805,435,349 | 934,026,234 |
| மொத்தப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள் | **2,056,798,369** | **1,942,962,790** |
| | | |
| இலாப விகிதாசாரம் | | |
| நிகர இலாப விகிதாசாரம் | 18% | 20% |
| மொத்த இலாப விகிதாசாரம் | 42% | 43% |
| | | |
| திரவநிலை விகிதாசாரம் | | |
| நடைமுறை சொத்து விகிதாசாரம் | 1:2 | 1:2 |
| உடனடி (நடைமுறை) சொத்து விகிதாசரம் | 1:2 | 1:2 |

# தலைவரின் செய்தி

மற்றொரு ஆண்டின் வரப்பிரசாதங்கள் முடிவுக்கு வருகையில், 2016 ஆம் வருடத்தின் ஆண்டறிக்கையையும், கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையையும் சமர்ப்பிப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை, சமூகத்திற்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பெறுமதிமிக்க பங்களிப்பாளராக தொடரும் எமது முயற்சியில் வருமான உருவாக்கம், வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துதல், பொருளாதார அபிவிருத்தி நிலை, சமூகப் பங்களிப்பு, சேவையாளர் தொண்டர் மனப்பான்மை என்பன அடங்கியிருந்தன.

மீளாய்வுக்குரிய ஆண்டில் மொத்த விற்பனை 15 பில்லியன் ஆக இருந்தது. முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் 25% வளர்ச்சியைக் காண்பித்தது. “சன்வர்தன லக்ஷபதி”, “கோடிபதி சனிதா” மற்றும் “அபிவிருத்தி அதிஷ்டம்” ஆகிய மூன்று புதிய அதிஷ்டச் சீட்டுக்கள் ஆரம்பிக்கப்பட்டதே இந்த அதிகரிப்புக்கான காரணமாகும். இதற்கு மேலதிகமாக, விற்பனை அபிவிருத்திப் பிரசார நடவடிக்கைகள் மற்றும் லொத்தர் சீட்டுக்களின் சந்தைப்படுத்தல் முயற்சிகள் என்பன காரணமாக, உடனடி, “கெலக்ஸி ஸ்டார்”, “நியத்த ஜய” மற்றும் “சுப்பர் போல்” ஆகிய அதிஷ்டச் சீட்டுக்களின் விற்பனை முறையே 32%, 3%, 5%, 9% அதிகரிப்பைக் காண்பித்தன.

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் இலாப நட்டக் கணக்கும் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளது. குறித்த ஆண்டில் வரிக்கு முந்திய இலாபமாக (PBT) ரூபா 2.7 பில்லியன் பதிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 13% அதிகரிப்பாகும். வருமான வரிக்கான எமது பங்களிப்பு, ரூபா 917 மில்லியனாக இருந்தது. இது, சென்ற வருடம் 662 மில்லியன் ரூபாவாக இருந்தது. இது 38% அதிகரிப்பை காண்பித்தது. இதன்பலனாக, வரிக்குப் பிந்திய இலாபம் ரூபா 1.8 பில்லியன் ஆகும். முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 3% வளர்ச்சியைக் காண்பித்தது.

## வளர்ச்சிக்கான வழிமுறைகள்

குறித்துரைக்கப்பட்ட ஆண்டின் போது வர்த்தகப் பெறுமானங்களை அடைந்து கொள்வதற்காக மாத்திரமல்லாமல், நிலைபேறான செயற்பாடு மற்றும் செயல்முறைகளின் பெறுமானங்களையும் அடையவென, நன்கு தயாரிக்கப்பட்ட திட்டங்களை நாம் தொடர்ச்சியாக நடைமுறைக்கிட்டு வந்துள்ளோம். விற்பனை நடவடிக்கைகளுக்கு மீள் புத்துணர்ச்சி அளிக்கவென, விற்பனையை ஈடு செய்யும் முக்கிய விற்பனை அபிவிருத்தி மற்றும் சந்தைப் பிரசாரத்தையும் மேற்கொள்ளவென புதிய விற்பனைப் பிரிவு ஒன்றையும் நாம் அறிமுகம் செய்துள்ளோம். தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தவென உதவிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்) ஒருவரை நிரந்தரமாக நியமனம் செய்து கொண்டோம்.

> குறித்த ஆண்டில் வரிக்கு முந்திய இலாபமாக (PBT) ரூபா 2.7 பில்லியன் பதிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 13% அதிகரிப்பாகும்.

இதுவரை காலமும் அதிஷ்டச் சீட்டிழுப்புக்களின் விற்பனை இடம்பெறாத பிரதேசங்களில் விற்பனைகளை மேற்கொள்ளும் வகையில் வட மாகாணத்தில் இராணுவத்தின் உதவியுடன் விசேட விற்பனை அபிவிருத்தி நடவடிக்கைகளை நாம் நடத்தினோம். கம்பஹா, களுத்துறை, குருணாகல், கண்டி, இரத்தினபுரி, அம்பாறை ஆகிய நாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களில் புதிய கிளைகள் திறக்கப்பட்டதையடுத்து, எமது சந்தைப்படுத்தல் அபிவிருத்தி நடவடிக்கைகள் மிகுந்த பலனளித்தன.

சமூகத்தின் மீது கொண்ட ஆர்வம், தொழில் வசதி உருவாக்கம் மீதான அமோக அபிலாஷை என்பனவற்றோடு இணைந்த வகையில், வட மாகாணத்தில் அதிஷ்டச் சீட்டு விற்பனை நிலையங்களை நிர்வகிக்கும் சந்தர்ப்பங்களை முன்னாள் LTTE தரப்பினருக்கு வழங்குவதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்புக்களையும் நாம் வழங்கினோம்.

பல்வேறு பங்குதாரர்களும் வழங்கிய உதவிகளுக்கென எனது மனப்பூர்வமான நன்றிகளை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நிதி அமைச்சு அதிகாரிகள், பணிப்பாளர் சபையினர், உப தலைவர், பொது முகாமையாளர் ஆகியோர் வழங்கிய ஆலோசனைகளுக்கும், ஆதரவுகளுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. அபிவிருத்தி லொத்தர் சபையின் முன்னாள் மற்றும் தற்போதைய சேவையாளர்கள் பல வருட காலமாக தங்களது ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். அவர்களது அர்ப்பணித்த சேவையும், தொழிற்திறனும் இல்லா விட்டால், இந்தப் பயணம் வெற்றியடைந்திருக்க மாட்டாது. அதிஷ்டச் சீட்டிழுப்பு - நடுவர்கள், ஜனாதிபதி நிதிய அதிகாரிகள், மகாபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியச் சேவையாளர்கள், விநியோகஸ்தர்கள், வர்த்தகர்கள், விற்பனை உதவியாளர்கள், ஊடகவியலாளர்கள், வங்கி அதிகாரிகள், கணக்காய்வாளர்கள், சகல விநியோகத்தர்கள் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றிகளையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பல்வேறு நடவடிக்கைகள் மூலம், நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பை வழங்கும் நாம், எமது பங்காளிகள் அனைவருக்கும் தொடர்ந்தும் அர்ப்பணித்துப் பணிபுரிவதோடு, நிலைபேறான அடிப்படையில் வளர்ச்சியடைந்தும் வருகின்றோம்.



எஸ்.ஏ.பி.சூரியப்பெரும
தலைவர்/பிநிஅ

அபிவிருத்தி லொத்தர் சபை

# பணிப்பாளர்கள் சபை (2016)

திரு. ரொமேஷ் ஜயவர்தன
தற்போதைய தலைவர்/பிநிஅ

திருமதி ஆர். ஐ. விமலசேன
உப தலைவர்

டொக்டர் விக்கிரம வீரசூரிய
பணிப்பாளர்

திரு. டி. என். நாணயக்கார
பணிப்பாளர்

திரு. எம். எஸ். டி. ரணசிறி
பணிப்பாளர்

# தற்போதைய பணிப்பாளர்கள் சபை

திரு. எஸ்.ஏ.பி.சூரியப்பெரும
தலைவர்/பிநிஅ

திரு. எச்.ஆர்.விமலசிரி
செயலாற்றுப் பணிப்பாளர்

திரு. டி. என். நாணயக்கார
பணிப்பாளர்

திரு. எச்.ஜீ.சுமனசிங்க
பணிப்பாளர்

திரு. டி.சி.திசாநாயக்க
பணிப்பாளர்

# பணிப்பாளர் சபையின் மீளாய்வு

2016 ஆம் ஆண்டு முக்கிய நடவடிக்கைகளையும், குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் பதிவு செய்த ஒரு வருடமாகும். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில், வறுமை ஒழிப்பு, கல்வி அபிவிருத்தி என்பனவற்றின் மேம்பாட்டிற்கென ஜனாதிபதி நிதியத்திற்கும், மகாபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்திற்கும் ரூபா 1,836 மில்லியனை அபிவிருத்தி லொத்தர் சபை வழங்கியுள்ளது. இத்தகைய பின்னணியில் 2016 ஆண்டறிக்கைக்கென பணிப்பாளர் சபையின் மீளாய்வைச் சமர்ப்பிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில், லொத்தர் சீட்டுக்களின் விற்பனையையும், அதிகரித்த இலாபத்தையும் பெறுவதற்கென நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தும் விற்பனைத் திட்டத்தை நாம் ஆரம்பித்தோம். இவற்றின் பெறுபேறாக வருடம் முழுவதற்குமான இலாபத்தின் வளர்ச்சியைக் கொண்டிருப்பதோடு, எமது வாடிக்கையாளர்களுக்கு மாபெரும் ரொக்கப் பரிசுகளை வழங்குவதில் வெற்றி கண்டுள்ளோம்.

வாடிக்கையாளர்கள், விற்பனை உதவியாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், சேவையாளர்கள், பொது மக்கள் மற்றும் அரசாங்கத்தினர் ஆகிய சகலருக்கும் இந்த வருடத்தில் பெறுமானத்தை வழங்கவென, அபிவிருத்தி லொத்தர் சபை முக்கிய நடவடிக்கைகளை நடைமுறைக்கிட்ட வருடமாகும்.

2016 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்களின் மாற்றமடைந்து வரும் எண்ணங்களைப் பூர்த்தி செய்து, அவர்களுக்கு கவர்ச்சிகரமான ரொக்கப் பரிசுகளை வழங்கவென, புதிய பல அதிஷ்டச் சீட்டுக்களை நாம் அறிமுகம் செய்திருந்தோம். எமது வெற்றிகரமான சந்தைப்படுத்தல் முயற்சிகள், பெறுமதி அதிகரிப்பு என்பனவற்றை உள்ளடக்கும் விதத்தில், நாம் அறிமுகம் செய்த "சன்வர்தன லக்ஷபதி" அதிஷ்டச் சீட்டு, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விற்பனையான 5.6 மில்லியன் அதிஷ்டச் சீட்டுக்கள் என்பதை முதல் சுற்றில் பதிவு செய்தது. இதனைத் தொடர்ந்து ஒழுங்கான அடிப்படையில் வாடிக்கையாளர்களின் விருப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அதிஷ்டச் சீட்டிழுப்புக்கள் தொடர்ந்தும் அதிஷ்டசாலிகளை உருவாக்கியதோடு, பெருமளவு தொகையை இலாபமாகவும் பெற முடிந்தது. மேலும், அதிக எண்ணிக்கையான வாடிக்கையாளர்களைக் கவரவும், தற்போதைய வாடிக்கையாளர்களின் விசுவாசத்திற்கு விருது வழங்கும் விதத்திலும், தற்போதுள்ள அதிஷ்டச் சீட்டிழுப்புக்களில் பெறுமதிசேர் அம்சங்கள் பலவற்றை நாம் அறிமுகம் செய்தோம்.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள விற்பனை உதவியாளர்கள் மற்றும் விற்பனை பிரதிநிதிகள் ஆகியோருக்கு நன்மையளிக்கும் விதத்தில் ஊக்க நடவடிக்கைத் திட்டம் ஒன்றையும், மருத்துவ உதவியையும் நாம் வழங்கியிருந்தோம். திறமையை அதிகரிக்கவும், இடர்களுக்குத் தீர்வு காணவுமென, குறிப்பிட்ட சில மாவட்டங்களில் விற்பனைப் பிரதிநிதிகளுக்கு குழு அடிப்படையிலான கலந்துரையாடலையும் நாம் ஒழுங்கு செய்திருந்தோம்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பை வழங்குவது என்ற அபிவிருத்தி லொத்தர் சபையின் தொலைநோக்கின் அடிப்படையில், புனர்வாழ்வளிக்கப்பட்ட 20 முன்னாள் எல்.ரி.ரி.ஈ தரப்பினரை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு விற்பனைப் பிரதிநிதிகளாக நியமித்து, ரூபா 02 மில்லியனையும் முதலீடு செய்திருந்தோம். ஒவ்வொருவருக்கும் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு விற்பனை நிலையம் ஒன்றும் வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 85 விற்பனைப் பிரதிநிதிகள் புதிய விற்பனை நிலையங்களை அமைக்கவென அவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களின் 30 விற்பனைப் பிரதிநிதிகள் புதிய விற்பனை நிலையங்களை அமைப்பதற்கெனவும் நாம் உதவி வழங்கியிருந்தோம். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் எமது விசுவாசம் மிக்க வாடிக்கையாளர்களுக்கு ரொக்கப் பரிசுகளாக ரூபா 7,755 மில்லியனை வழங்கி, அவர்களது நிதி நிலைமையையும் மேம்படச் செய்திருந்தோம்.

நிறைவாக, அபிவிருத்தி லொத்தர் சபையின் விசுவாசம் மிக்க சேவையாளர்களுக்கும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினர்களுக்கும் அவர்களின் அர்ப்பணித்த நடவடிக்கைகளுக்கென எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது கணக்காய்வாளர்களுக்கும், அவர்கள் தொடர்ச்சியாக வழங்கும் ஆதரவுக்கும் நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். நாம் இன்று அடைந்துள்ள மகோன்னதமான வெற்றி, எமது விசுவாசம் மிக்க வாடிக்கையாளர்களின் பங்களிப்பு இல்லாமல் பெற்றுக்கொள்வதென்பது இயலாத விடயமாகும். அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பில் எமது பாராட்டுக்களையும் நன்றியையும் நாம் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். 2017 ஆம் ஆண்டில் மேலும் உச்சக்கட்ட பெறுமானங்களை அடையும் எமது முயற்சியை நாம் தொடர்ந்து மேற்கொள்வதோடு, நாட்டின் பொருளாதார சமூக முன்னேற்றத்திற்கும் எமது பங்களிப்பை வழங்கவிருக்கின்றோம்.

டொக்டர் விக்கிரம வீரசூரிய

பணிப்பாளர்

# முகாமைத்துவக் குழு

திரு. ஜே.எம்.சமன் ஜயசிங்க
பொது முகாமையாளர்

திரு. அநுர ஜயரத்ன
பிரதிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல்

செல்வி விஜித்தா சோமரத்ன
பிரதிப் பொது முகாமையாளர் - நிதி

திரு. சானக தொடங்கொடகே
உதவிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல்

திரு. கபில புலத்சிங்கள
உதவிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல்

திரு. அசங்க எஸ் குனசிங்க
உதவிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல்

திரு. சுனில் ஜயரத்ன
உதவிப் பொது முகாமையாளர் - நிதி

திரு. கசுன் ஜயசூரிய
உதவிப் பொது முகாமையாளர் - நிதி

திரு. நிஷான் பெரேரா
உதவிப் பொது முகாமையாளர் - நிதி

திரு. வசந்த சேனாதீர
உள்ளகக் கணக்காய்வாளர்

மேஜர் ஜே.எம்.டி.ஏ.கிருஷாந்த
பிரதம பாதுகாப்பு அதிகாரி

மதுரா ஹர்ஷன
உதவிப் பொது முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம்

# கனிஷ்ட முகாமையாளர்கள்

திரு. நுவன் அபேரத்ன
நிருவாக உத்தியோகத்தர்

திரு. ஜீ. ரொஷான் பிரியந்த
சந்தைப்படுத்தல் அதிகாரி

திரு.சீ.சீ.அயிலப்பெரும
சந்தைப்படுத்தல் அதிகாரி

திரு. ஜீ.ஏ.ஆர்.எஸ்.ரணதுங்க
சந்தைப்படுத்தல் அதிகாரி

திரு.எம்.பி.எம்.என்.கே.பலகல்ல
சந்தைப்படுத்தல் அதிகாரி

திரு.எம்.கே.அஜித் இந்திக கமலசிரி
சந்தைப்படுத்தல் அதிகாரி

திரு. ஐ.டி.பி.குமாரசிறி
சந்தைப்படுத்தல் அதிகாரி

திரு. ஐ.ஏ.உமேஷ் கயங்க இளேபெரும
முறைமை / செய்நிரல் பகுப்பாய்வாளர்

திருமதி சமிலா தெவரப்பெரும
மனித வளங்கள் அதிகாரி

திரு. சமிந்த கருணாரத்ன
கொள்முதல் அதிகாரி

திரு. என்.வீ.இந்திக உப்புல்
நிதித்துறை அதிகாரி

திருமதி ஆர்.டி.சந்திரா ராஜபக்ஷ
நிதித்துறை அதிகாரி

திருமதி நிரஞ்சலா குணசேகர
நிதித்துறை அதிகாரி

திருமதி வத்சலா ரூபசிங்க
நிதித்துறை அதிகாரி

# செயற்பாட்டு மீளாய்வு

## 2016 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார நோக்கு

2016 ஆம் ஆண்டில் உள்நாட்டிலும், உலகளாவிய ரீதியிலும் பல்வேறு சவால்கள் எதிர்நோக்கப்பட்ட போதிலும், இலங்கையின் பொருளாதாரம் 4.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. ஓரளவு மோசமான காலநிலை காரணமாக விவசாயத் துறையில் முக்கியமாக நெல், தேயிலை, இறப்பர் துறைகளில் எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டன. இதன் காரணமாக, விவசாயம், வனப் பிரதேசம் மற்றும் கடற்றொழில் சம்பந்தமான துறைகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.1 சதவீதமாகக் குறைந்த நிலையில் பதிவு செய்யப்பட்டது. இது, எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியிலும் பார்க்க 4.2 சதவீதம் குறைவானதாகும். இருந்த போதிலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 56.5 சதவீதத்தைப் பதிவு செய்யும் சேவைகள் துறை 4.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கு நிதித்துறைச் சேவைகளின் 12.4% வளர்ச்சியும் அனுசரணையாக இருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியும் 26.8% ஐப் பிரதிபலிக்கும் கைத்தொழிற்துறை ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் 6.7% ஆல் அதிகரித்தது. கட்டட நிர்மாணம், சுரங்கத்தொழில், கல் உடைத்தல் போன்ற உப பிரிவுகளின் வளர்ச்சியே இதற்குக் காரணமாகும். உற்பத்தித்துறை 1.7% வளர்ச்சியை மாத்திரமே காண்பித்தது.




மூலம்: தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்



## பணவீக்கம்

2016 ஆம் ஆண்டின் முதலாவது தவணையில் பணவீக்கம் குறைந்த அளவில் காணப்பட்டு, எஞ்சிய தவணைகளில் வருடாந்த சராசரியாக 4% அதிகரிப்பைப் பதிவு செய்ததாக தேசிய பாவனையாளர் விலைச் சுட்டியும், கொழும்பு பாவனையாளர் விலைச் சுட்டியும் அறிவித்துள்ளன. காலநிலை ஓரளவு மோசமாக இருந்து பொருட்களின் விலை அதிகரிப்பு சர்வதேச சந்தையில் ஏற்பட்டதும் சந்தை மற்றும் வரி சீராக்கல்கள் காரணமாகவும், பணவீக்கத்தின் விகிதம் தொடர்ந்தும் அதிகரித்திருந்தது.

## கொடுப்பனவின் நிலுவை

சுற்றுலாத்துறை, சேவைகளின் ஏற்றுமதி, வெளிநாட்டிலுள்ள தொழிலாளர்கள் அனுப்பிய நிதி என்பன காரணமாக, சம்பாத்தியத்தில் அதிகரிப்பு காணப்பட்டது. இருந்த போதிலும், உலக வட்டி வீத அதிகரிப்பு, நேரடி முதலீட்டுகள் அதிகளவில் கிடைக்காமை, உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான கோரிக்கைகள் பலமிழந்து காணப்பட்டமை என்பன கொடுப்பனவு நிலுவையில் பற்றாக்குறையை ஏற்படுத்தின. (BOP).

## எதிர்கால நோக்கங்கள்

இலங்கையின் பொருளாதாரம் 2017 ஆம் ஆண்டில், மிக மோசமான காலநிலை காரணமாக ஓரளவு மந்தகதி எனக் கூறக்கூடிய 5% ஐ காண்பிக்குமென எதிர்பார்க்கப்பட்டது, இருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டளவில் வருடாந்த வளர்ச்சி வீதமாக 7% ஐ நாடு பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. தனியார்துறையின் வளர்ச்சியும் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களும் வெளிவாரி சந்தைகளில் மேம்பட்ட நிலைமையும் இதற்கான காரணங்கள் எனக் குறிப்பிட முடியும்.

## முக்கிய நடவடிக்கைகள்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் ஜனாதிபதி நிதியத்திற்கும், மகாபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்திற்கும் அபிவிருத்தி லொத்தர் சபை ரூபா 1,836 மில்லியனை வழங்கியது. 1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தினால் ஆளுமைக்குட்படுத்தப்பட்டு, வறுமை ஒழிப்பு, கல்வித்துறை அபிவிருத்தி மற்றும் ஏனைய தேசியமட்ட

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென நிதியை உருவாக்குவதை முக்கிய இலக்காக சபை கொண்டுள்ளது.

## தயாரிப்புச் சேவை விபரங்கள்

| லொத்தர் | சீட்டிழுப்புக்கான வழிமுறை |
|---|---|
| சனிக்கிழமை அதிஷ்டம் | மொத்தம் 75 பந்துகளிலிருந்து வெற்றி பெறும் நான்கு இலக்கங்கள். போனஸ் இலக்கம் - அதே இயந்திரத்திலிருந்து எஞ்சிய 71 பந்துகளில் ஒரு இலக்கம். ஆங்கில எழுத்து - தனியான இயந்திரத்திலிருந்து 26 ஆங்கில எழுத்துக்களில் ஒரு எழுத்தைக் கொண்ட பந்தை தெரிவு செய்தல். |
| லக்ன வாசனா | முதலாவது கட்டம் - 61 பந்துகளில் நான்கு பந்துகள் தெரிவு. இரண்டாவது கட்டம் - 12 ராசிகளின் அடையாளங்களில் இருந்து ஒன்று தெரிவு செய்யப்படுதல் |
| ஜயோதா | வெற்றி பெறும் நான்கு இலக்கங்கள் - 68 பந்துகளில் இருந்து ஒரே இயந்திரத்தில் நான்கு இலக்கங்கள் தெரிவு செய்யப்படுதல். ஆங்கில எழுத்து - தனியான இயந்திரத்திலிருந்து 26 ஆங்கில எழுத்துக்களில் ஒரு எழுத்தைக் கொண்ட பந்தை தெரிவு செய்தல். |
| கெலக்ஸி ஸ்டார் | வெற்றி பெறும் நான்கு இலக்கங்கள் - ஒரே இயந்திரத்திலிருந்து 60 பந்துகளில் நான்கு இலக்கங்கள் தெரிவு செய்யப்படுதல். நட்சத்திர அடையாளம் - தனியான ஒரு இயந்திரத்திலிருந்து 12 இலக்கங்களில் ஒரு பந்து தெரிவு செய்யப்படுதல். |
| நியத்த ஜய | வெற்றி பெறும் நான்கு இலக்கங்கள் - ஒரே இயந்திரத்திலிருந்து 65 இலக்கங்களில் நான்கு இலக்கங்கள் தெரிவு செய்யப்படுதல். ஒரு ஆங்கில எழுத்து - தனியான இயந்திரத்திலிருந்து 26 ஆங்கில எழுத்துக்களில் ஒரு எழுத்தைக் கொண்ட பந்தை தெரிவு செய்தல். |
| சுப்பர் போல் | வெற்றி பெறும் நான்கு இலக்கங்கள் - ஒரே இயந்திரத்திலிருந்து 73 பந்துகளில் இருந்து நான்கு இலக்கங்கள் தெரிவு செய்யப்படுதல். ஆங்கில எழுத்து - தனியான இயந்திரத்திலிருந்து 26 ஆங்கில எழுத்துக்களில் ஒரு எழுத்தைக் கொண்ட பந்தை தெரிவு செய்தல். |

| லொத்தர் | சீட்டிழுப்புக்கான வழிமுறை |
|---|---|
| உடனடி | |
| சன்வர்தன லக்ஷபதி | வெற்றி பெறும் மூன்று இலக்கங்கள் ஒரு இயந்திரத்திலிருந்து 50 இலக்கங்களில் மூன்று இலக்கங்கள் தெரிவு செய்யப்படுதல். |
| கோட்டிபதி சனிதா | முதலாவது கட்டம் - 80 பந்துகளில் நான்கு பந்துகள் தெரிவு செய்யப்படுதல். இரண்டாவது கட்டம் - 26 ஆங்கில எழுத்துக்களில் ஒன்று தெரிவு செய்யப்படுதல். |
| அபிவிருத்தி அதிஷ்டம் | முதலாவது கட்டம் - 65 பந்துகளில் நான்கு தெரிவு செய்யப்படுதல் இரண்டாவது கட்டம் - 12 மாதங்களில் ஒரு மாதம் தெரிவு செய்யப்படுதல் மூன்றாவது கட்டம் - 06 இலக்கங்களில் ஒன்று தெரிவு செய்யப்படுதல் |

2016 ஆம் ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகளின் அடிப்படையில் செயற்பாட்டை ஒருமுகப்படுத்தவென அபிவிருத்தி லொத்தர் சபை முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதனடிப்படையில் சேவையாளர்களின் மனநிறைவு, நேரடி நன்மைகளை வழங்குவதன் மூலம் விற்பனைப் பிரதிநிதிகளை ஊக்குவிப்பதன் அடிப்படையில் விற்பனை அதிகரிப்பு, புதிய வாடிக்கையாளர் தளத்தை விஸ்தரித்து கவர்ச்சிகரமான பரிசுகளை வழங்குவதன் மூலம் தற்போதைய வாடிக்கையாளர்களை தொடர்ந்தும் வைத்திருத்தல். இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக, அபிவிருத்தி லொத்தர் சபையின் பாராட்டத்தக்க செயற்பாட்டின் மூலம் 2016 ஆம் ஆண்டில் சிறந்த பெறுபேறுகள் கிடைத்தன.

## செயற்பாட்டுச் சுட்டிகளின் முக்கிய அம்சங்கள்

| | 2016 | 2015 |
|---|---|---|
| உச்சக்கட்ட ஜக்பொட் | 98,560,620 | 56,974,540 |
| வெற்றியாளர்களின் ஒரு மாத சராசரி எண்ணிக்கை | 15,336,386 | 12,237,438 |
| மொத்த விற்பனை (ஆண்டிற்கானது) | 14,759,875,240 | 11,874,659,603 |
| வழங்கப்பட்ட மொத்த பரிசுகள் | 7,755,659,066 | 6,150,951,795 |
| வெற்றியாளர்களின் எண்ணிக்கை | 184,036,631 | 146,849,258 |
| உருவாக்கப்பட்ட இலட்சாதிபதிகளின் எண்ணிக்கை | 540 | 575 |
| ஜனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு | 1,836,020,000 | 1,628,053,000 |

## சந்தைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு முக்கிய அம்சங்கள்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் அபிவிருத்தி லொத்தர் சபை சந்தையில் பல புதிய அம்சங்களை அறிமுகம் செய்தது.

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

புதிய வாடிக்கையாளர்களைக் கவரும் வகையிலும் தற்போதுள்ள வாடிக்கையாளர்களின் அக்கறையை புனரமைக்கும் வகையிலும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை அபிவிருத்தி லொத்தர் சபை மேற்கொண்டது.

## சன்வர்தன லக்ஷபதி

சன்வர்தன லக்ஷபதி அதிஷ்டச் சீட்டிழுப்பு 2016 மார்ச் 14 ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபையினால் அறிமுகம் செய்யப்பட்டது. அறிமுக நடவடிக்கைகளுக்கு முன்னராக மேற்கொள்ளப்பட்ட மிக விஸ்தாரமான சந்தைப்படுத்தல் பிரசார நடவடிக்கைகளின் காரணமாக, சன்வர்தன லக்ஷபதி அதிஷ்டச் சீட்டு விற்பனை 5.6 மில்லியன் என்ற சாதனையை நிலைநாட்டியது.

## கோட்டிபதி சனிதா

அபிவிருத்தி லொத்தர் சபை 2016 ஏப்ரல் 08 ஆம் திகதி 75 மில்லியன் ரூபா பரிசைக் கொண்ட கோட்டிபதி சனிதா அதிஷ்டச் சீட்டை அறிமுகம் செய்தது. பூர்வாங்க விற்பனையின் போது 4.4 மில்லியன் அதிஷ்டச் சீட்டுக்கள் விற்கப்பட்டன.

## சன்வர்தன வாசனாவ

தொலைக்காட்சி அதிஷ்டச் சீட்டிழுப்பான சன்வர்தன வாசனாவ மூன்று ரொக்கப் பரிசுகளுடன் 2016 டிசம்பர் 22 ஆம் திகதி முற்றிலும் புதிய வகையில் மீள ஆரம்பிக்கப்பட்டது.

## இலக்காகக் கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள்

### "லக்ஷ வருடம்"

லக்ஷ வருட பிரசார நடவடிக்கைகள் லக்ன வாசனாவ, நியத்த ஜய, கோட்டிபதி சனிதா ஆகிய அதிஷ்டச் சீட்டிழுப்புக்களின் விற்பனைகளை அதிகரிக்கவென ஆரம்பிக்கப்பட்டன. 2016 மே 27 ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபை லக்ஷ வருட பிரசார நடவடிக்கையின் ஒரு பகுதியாக ரூபா 100,000 ஐ ரொக்கப் பரிசாகக் கொண்ட விசேட வெற்றி பெறும் இலக்கத்தை வெளியிட்டது. இந்த வகையில், விற்கப்பட்ட அதிஷ்டச் சீட்டுக்களின் எண்ணிக்கை 3.25 மில்லியனாகும்.

### ஷனிதா வாசனாவ

ஷனிதா வாசனாவ அதிஷ்டச் சீட்டு முற்றிலும் புதிய முறையில் மீள அறிமுகம் செய்யப்பட்டது. ரொக்கப் பரிசான 30 மில்லியன் ரூபா மற்றும் ஆங்கில எழுத்துக்கென ரூபா 20 என்பனவற்றைக் கொண்ட விசேட அதிஷ்டச் சீட்டு சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டது. விசேட அதிஷ்டச் சீட்டிழுப்பின் போது விற்கப்பட்ட சீட்டுக்களின் எண்ணிக்கை 2.83 மில்லியன் ஆகும்.

### லக்ன வாசனாவ - இரட்டைத் தருணங்கள்

அபிவிருத்தி லொத்தர் சபையின் லக்ன வாசனாவ அதிஷ்டச் சீட்டின் வாராந்த சீட்டிழுப்பின் போது ரொக்கப் பரிசுகளின் விசேட சுற்று மற்றும் 80 மேலதிகப் பந்துகளில் இரண்டு வெற்றி பெறும் இலக்கங்கள் என்பன அதில் அடங்கியிருந்தன. வெற்றி பெறும் முதலாவது இலக்கத்திற்கு ரூபா 50 ரொக்கப் பரிசும், வெற்றி பெறும் இரண்டு இலக்கங்களுக்கு ரூபா 1,000 ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டன. 2016 ஒக்டோபர் 21 ஆம் திகதி விசேட சுற்றின் பூர்வாங்க அறிமுகத்தின் போது 2.2 மில்லியன் அதிஷ்டச் சீட்டுக்கள் விற்கப்பட்டன. ரொக்கப் பரிசுகளின் விசேட சுற்று நடவடிக்கை அடுத்த மூன்று மாத காலத்திற்கு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. வாடிக்கையாளர்களுக்கு மேலதிக பரிசுகள் கிடைத்தன.

### ஜயோதா - "வெற்றி மேல் வெற்றி"

வெற்றி பெறும் இரண்டு இலக்கங்களைக் கொண்ட வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் ரூபா 60 ஐ அபிவிருத்தி லொத்தர் சபை 100 ரூபாவாக அதிகரித்து 2016 நவம்பர் 21 ஆம் திகதி மேலதிக ரொக்கப் பரிசையும் வழங்கியது. அச்சிடப்பட்ட வெற்றி மேல் வெற்றி அதிஷ்டச் சீட்டுக்களின் மொத்த எண்ணிக்கை 1.7 மில்லியனாகும்.

### நியத்த ஜய - "தெதஹே ரல"

அதிஷ்டச் சீட்டிழுப்புக்களின் விற்பனையை அதிகரிக்கவென அபிவிருத்தி லொத்தர் சபை "தெதஹே ரல" என்ற பெயரில் 2016 நவம்பர் 29 ஆம் திகதி பாரியளவிலான லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டது. விற்பனை செய்யப்பட்ட அதிஷ்டச் சீட்டுக்களின் மொத்த எண்ணிக்கை 1.23 மில்லியன் ஆகும்.

### சுப்பர் போல் - லக்கி சீசன்

நத்தார் பண்டிகைக் காலத்தின் போது விற்பனைக்கிடவென அபிவிருத்தி லொத்தர் சபை சுப்பர் போல் அதிஷ்டச் சீட்டின் விசேட விற்பனை அதிகரிப்பை இலக்காகக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டது. நத்தார் பண்டிகைக் காலத்தின் போது, சுப்பர் போல் அதிஷ்டச் சிட்டிழுப்பின் மூலம் வழங்கப்பட்ட மேலதிக ரொக்கப் பரிசுடன் விற்கப்பட்ட சீட்டுக்களின் எண்ணிக்கை டிசம்பர் 29 ஆம் திகதியன்று 2.03 மில்லியன் ஆகும்.

### சன்வர்தன லக்ஷபதி - வெற்றி நிச்சயம்

அபிவிருத்தி லொத்தர் சபை சன்வர்தன லக்ஷபதி அதிஷ்டச் சீட்டுக்கென மேலதிக ரொக்கப் பரிசுடன் விசேட சுற்றை அறிமுகம் செய்தது. "வெற்றி நிச்சயம்" என்ற தொனிப்பொருளில் 2016 ஒக்டோபர் 10 ஆம் திகதி விற்கப்பட்ட அதிஷ்டச் சீட்டுக்களின் எண்ணிக்கை 1.02 மில்லியன் ஆகும்.

### உடனடி லொத்தர் சீட்டுக்கள்

உடனடி லொத்தர் வெற்றியாளர்களுக்கும், முகவர்களுக்கும் விருதை வழங்கவென அபிவிருத்தி லொத்தர் சபை புதியதொரு திட்டத்தை அறிமுகம் செய்தது. இதன் கீழ் 2016 நவம்பர்

மாத்தில் வெற்றியாளர்கள் சிங்கப்பூருக்கான பயணத்தை பெற்றுக் கொண்டனர். 08 வெற்றியாளர்களின் குடும்பங்களும் ஆகக்கூடிய அதிஷ்டச் சீட்டுக்களை விற்பனை செய்த ஐந்து முகவர்களும் சிங்கப்பூருக்குச் செல்வதற்கான தருணத்தைப் பெற்றுக் கொண்டனர்.

### விற்பனையாளர்களின் விஸ்தரிப்பும் விருது வழங்கும் திட்டங்களும்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் புதிய முகவர்களை நியமிப்பதற்கும், தற்போதுள்ள முகவர்களுக்கான விருது வழங்கலை விஸ்தரிப்பதற்கும் அபிவிருத்தி லொத்தர் சபை முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. 2016 ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை நாட்டின் பல பகுதிகளிலும் 200 புதிய விற்பனையாளர்களை நியமித்தது. விற்பனையை அதிகரிப்பதும், அதிகரித்த இலாபத்தைப் பெறுவதற்குமென இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுமக்களை சென்றடைந்து வாடிக்கையாளர்களின் தளத்தை விஸ்தரிக்கும்படி முகவர்கள் ஊக்கமளிக்கப்பட்டார்கள்.

| எமது அதிஷ்டச் சீட்டிழுப்புக்களின் விபரங்கள் |
| --- |
| சனிக்கிழமை அதிஷ்டம் |
| லக்ன வாசனா |
| ஜயோதா |
| கெலக்ஸி ஸ்டார் |
| நியத்த ஜய |
| சுப்பர் போல் |
| உடனடி |
| சன்வர்தன லக்ஷபதி |
| கோட்டிபதி சனிதா |
| அபிவிருத்தி அதிஷ்டம் |

முகவர்களுக்கும், விற்பனை பிரதிநிதிகளுக்கும் விருதுகளை வழங்கும் நோக்கில், அபிவிருத்தி லொத்தர் சபை விநியோகத்தர்களுக்கும், விற்பனையாளர் பிரதிநிதிகளுக்குமென செயற்பாட்டு ஊக்கக் கொடுப்பனவுகளை அறிமுகம் செய்தது. இவற்றுக்கு மேலதிகமாக, முகவர்களும், விற்பனைப் பிரதிநிதிகளும் மருத்துவ உதவிகளையும் பெற்றுக் கொண்டனர். விற்பனையை அதிகரிக்கவென மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் முகவர்களுக்கான மாவட்ட மட்ட கூட்டங்களையும் அபிவிருத்தி லொத்தர் சபை நடத்தியது. 82 விநியோகத்தர்களுக்கு வழங்கிய மருத்துவ உதவியின் செலவினம் ரூபா 1.4 மில்லியன் ஆகும்.

வட மாகாணத்தில் விற்பனையை அதிகரிக்கவென அபிவிருத்தி லொத்தர் சபை ரூபா 02 மில்லியனை ஒதுக்கீடு செய்தது. வட மாகாணத்திலுள்ள முன்னாள் எல்.ரி.ரி.ஈ தரப்பினருக்குப் பயிற்சியளித்து, அவர்களுக்கான விற்பனை நிலையங்களை அமைப்பதில் இந்தத் தொகை செலவிடப்பட்டது.

விற்பனை அதிகரிப்பு வழிமுறைகளில் மேலும் ரூபா 1,250,000 செலவிடப்பட்டது, விற்பனையாளர்களின் அதிஷ்டச் சீட்டிழுப்பு விற்பனை நிலைங்களை அபிவிருத்தி செய்வதில் இந்த தொகை செலவிடப்பட்டது, இந்த முயற்சியின் போது, 85 விற்பனையாளர்கள், ஒவ்வொருவரும் ரூபா 15,000 ஐப் பெற்றுக் கொண்டனர்.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளில் 30 அதிஷ்டச் சீட்டிழுப்பு விற்பனை நிலையங்களை அமைப்பதில் அபிவிருத்தி லொத்தர் சபை ரூபா 1,350,000 ஐ செலவிட்டது.

அதிஷ்டச் சீட்டிழுப்பு விற்பனை நிலையங்களுக்கென சீட்டுக்களை அச்சிடுவதில் ரூபா 558,083 ஐ அபிவிருத்தி லொத்தர் சபை செலவிட்ட அதேசமயத்தில், ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் கூட்டிணைப்பு சமூகப் பொறுப்புணர்ச்சி நடவடிக்கைகளில் ரூபா 9.45 மில்லியனை சபை செலவிட்டது.

இலாபத்தை அதிகரிக்கும் அதேசமயத்தில், விற்பனையை ஒருமுகப்படுத்தவென 06 விற்பனை உதவியாளர்களுக்கு விற்பனை அதிகாரிகள் என்ற பதவி உயர்வை அபிவிருத்தி லொத்தர் சபை வழங்கியது. புதிதாக பதவி உயர்வு பெற்ற விற்பனை அதிகாரிகள் கம்பஹா, களுத்துறை, குருநாகல், கண்டி, இரத்தினபுரி, அம்பாறை ஆகிய பகுதிகளுக்கு அபிவிருத்தி லொத்தர் நடவடிக்கைகளை விஸ்தரிக்கவென அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் மூன்று புதிய விற்பனை உதவியாளர்களையும், 09 விற்பனை இணைப்பாளர்களையும் நாட்டின் பல பகுதிகளிலும் விற்பனையை அதிகரிக்கும் முக்கிய நோக்கத்தின் அடிப்படையில் அபிவிருத்தி லொத்தர் சபை நியமித்தது.

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

## நிதித்துறை மீளாய்வு

### நிதித்துறைச் செயற்பாட்டின் மீள்பார்வை

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் வரிக்கு முந்திய இலாபமாக அபிவிருத்தி லொத்தர் சபை ரூபா 2.7 பில்லியனைப் பதிவு செய்தது. இது, முந்திய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 13% அதிகரிப்பாகும். சபையின் அரசாங்கத்திற்கான வருமான வரி பங்களிப்பு ரூபா 917 மில்லியனாக அதிகரித்தது. இது முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் 38.42% சதவீத அதிகரிப்பை காண்பித்தது. வரித்தொகை பெருமளவாக இருந்ததனால், அபிவிருத்தி லொத்தர் சபையின் வரிக்குப் பிந்திய இலாபம் ரூபா 1.8 பில்லியனாக இருந்தது. இது, முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் 3% அதிகரிப்பாகும்.

2016 ஆம் ஆண்டு விரிவான சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்ட வருடமாகும். விற்பனையை மேம்படச் செய்வதும், நிலைபேறான இலாபத்தை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும்.

2016 ஆம் ஆண்டுக்கான சபையின் மொத்த விற்பனை 15 பில்லியன் ஆகும். முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில், 24.7% சதவீத அதிகரிப்பை இது காண்பித்தது. புதிய லொத்தர்கள் அறிமுகம் செய்யப்பட்டமை மற்றும் அதிநவீன சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் என்பன விற்பனை அதிகரிப்புக்கு காரணிகளாக இருந்தன. புதிய சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, உடனடி லொத்தரின் விற்பனை 32% ஆல் அதிகரித்த அதேவேளை, சுப்பர் போல் லொத்தர் 09% அதிகரிப்பைக் காண்பித்தது. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நியத்த ஜய லொத்தரின் விற்பனை 5% ஆலும், கெலக்ஸி ஸ்டார் லொத்தர் விற்பனை 3% ஆலும் அதிகரித்தன.

2016 ஆம் ஆண்டில் ரூபா 1.8 பில்லியனை ஜனாதிபதி நிதியத்திற்கு அபிவிருத்தி லொத்தர் சபை வழங்கியது. இது, முந்திய வருட பங்களிப்பான ரூபா 1.6 உடன் ஒப்பிடுகையில் 12.77% சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது.

### வழங்கப்பட்ட மொத்தப் பரிசுகளும் வெற்றியாளர்களின் எண்ணிக்கை அடிப்படையிலான செயற்பாடும்

| லொத்தரின் விபரங்கள் | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட பரிசுகள் | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட பரிசுகள் | வெற்றியாளர்களின் எண்ணிக்கை |
| சனிக்கிழமை அதிஷ்டம் | 1,242,791,000 | 27,199,379 | 1,270,434,000 | 27,181,310 |
| லக்ன வாசனா | 1,449,623,550 | 45,452,262 | 1,491,265,928 | 40,350,419 |
| ஜயோதா | 712,645,000 | 18,361,051 | 712,092,000 | 18,433,106 |
| நியத்த ஜய | 620,295,000 | 16,474,559 | 588,235,500 | 15,228,196 |
| சுப்பர் போல் | 1,372,077,500 | 32,420,969 | 1,261,931,500 | 30,627,030 |
| கெலக்ஸி ஸ்டார் | 568,453,900 | 17,599,013 | 551,431,323 | 15,029,197 |
| சன்வர்தன லக்ஷபதி | 500,111,500 | 8,637,497 | - | - |
| அபிவிருத்தி அதிஷ்டம் | 24,193,000 | 596,728 | - | - |
| கோட்டிபதி சனிதா | 786,236,050 | 17,295,173 | - | - |
| மொத்தம் | 7,276,426,500 | 184,036,631 | 5,875,390,251 | 146,849,258 |

### விநியோகத்தர்கள், விற்பனை முகவர்கள், விற்பனையாளர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டங்கள்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள விநியோகத்தர்கள், விற்பனையாளர்கள் ஆகியோருக்கு மிகச்சிறந்த செயற்பாட்டிற்கென அபிவிருத்தி லொத்தர் சபை ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கியது. இதற்கு மேலதிகமாக 82 விநியோகத்தர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் ரூபா 1.4 மில்லியன் செலவில் மருத்துவ உதவியை வழங்கியது.

### விற்பனையாளர் / முகவர்களின் கூட்டங்கள்

2016 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் மாவட்டங்களில் முகவர்கள் கூட்டங்கள் இடம்பெற்றன.

| திகதி | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 19.11.2016 | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 20.11.2016 | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |

2016 க்கான புதிய விநியோகத்தர்களின் நியமனம்

| மாவட்டம் | விநியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 02 |
| புத்தளம் | 01 |
| பொலன்னறுவை | 01 |
| மொத்தம் | **04** |

2016 ஆம் ஆண்டில் முகவர்களின் நியமனம்

| மாவட்டம் | முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 37 |
| களுத்துறை | 08 |
| கண்டி | 07 |
| மாத்தளை | 08 |
| மட்டக்களப்பு | 01 |
| அம்பாறை | 05 |
| திருகோணமலை | 03 |
| குருநாகல் | 16 |
| நுவரெலியா | 10 |
| காலி | 12 |
| மாத்தறை | 06 |
| யாழ்ப்பாணம் | 02 |
| வவுனியா | 05 |
| இரத்தினபுரி | 12 |
| கம்பஹா | 22 |
| புத்தளம் | 08 |
| அநுராதபுரம் | 09 |
| பொலன்னறுவை | 05 |
| பதுளை | 06 |
| மொனராகல | 04 |
| கேகாலை | 07 |
| முல்லைத்தீவு | 02 |
| ஹம்பாந்தோட்டை | 04 |
| கிளிநொச்சி | 01 |
| மொத்தம் | **200** |

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

## லொத்தர் சீட்டுக்களின் தொகுப்பு

### 1. சனிக்கிழமை அதிஷ்டம்

#### லொத்தர் சீட்டின் வழிமுறை

ஒரு இயந்திரத்திலுள்ள 75 பந்துகளில் நான்கு (04) வெற்றி இலக்கங்கள் தெரிவு செய்யப்படும். எஞ்சிய 71 பந்துகளிலிருந்து அதே இயந்திரத்தில் ஒரு (01) போனஸ் இலக்கம் தெரிவு செய்யப்படும் தனியான ஒரு இயந்திரத்திலிருந்து 26 ஆங்கில எழுத்துக்களில் ஒரு பந்தின் மூலம் ஒரு (01) எழுத்து தெரிவு செய்யப்படும்.

#### பரிசு அமைப்பு

| இணைப்பு | பரிசு (ரூபா) |
|---|---|
| எந்தவொரு தனி இலக்கத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு ஆங்கில எழுத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு 02 இலக்கங்கள் | ரூபா 100.00 |
| எந்தவொரு 03 இலக்கங்கள் | ரூபா 1,000.00 |
| நான்கு இலக்கங்கள் | ரூபா 1,000,000.00 |
| எந்தவொரு இலக்கமும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 40.00 |
| எந்தவொரு 02 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 1,000.00 |
| எந்தவொரு 03 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 10,000.00 |
| 04 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 30,000,000.00 |
| எந்தவொரு இலக்கமும்+போனஸ் இலக்கமும் | ரூபா 100.00 |
| எந்தவொரு 02 இலக்கங்களும் + போனஸ் இலக்கமும் | ரூபா 500.00 |
| எந்தவொரு 03 இலக்கங்களும் + போனஸ் இலக்கமும் | ரூபா 100,000.00 |

#### சீட்டிழுப்புத் திகதி

ஊதா நிற லொத்தர் சீட்டுக்களின் அதிஷ்டச் சீட்டிழுப்பு ஒவ்வொரு புதன் கிழமையும், பச்சை நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு ஒவ்வொரு சனிக்கிழமையும் இடம்பெறும்.

### 2. ஜயோதா

#### லொத்தர் சீட்டின் வழிமுறை

ஒரு இயந்திரத்திலுள்ள 68 பந்துகளிலிருந்து நான்கு (04) வெற்றி இலக்கங்கள் தெரிவு செய்யப்படும். தனியான ஒரு (01) இயந்திரத்திலிருந்து 26 ஆங்கில எழுத்துக்களில் ஒரு பந்தின் மூலம் ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்படும்.

#### பரிசு அமைப்பு

| இணைப்பு | பரிசு (ரூபா) |
|---|---|
| எந்தவொரு ஆங்கில எழுத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு இலக்கத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு 02 இலக்கங்கள் | ரூபா 100.00 |
| எந்தவொரு 03 இலக்கங்கள் | ரூபா 1,000.00 |
| சகல நான்கு இலக்கங்களும் | ரூபா 1,000,000.00 |
| எந்தவொரு இலக்கமும்+ஆங்கில எழுத்தும் | ரூபா 40.00 |
| எந்தவொரு 02 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 1,000.00 |
| எந்தவொரு 03 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 50,000.00 |
| எந்தவொரு 04 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 10,000,000.00 |

#### சீட்டிழுப்புத் திகதி

மஞ்சள் நிற லொத்தர் சீட்டிழுப்பு திங்கட் கிழமை தோறும் இளஞ் சிவப்பு நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு வியாழக்கிழமை தோறும் நடைபெறும்.

#### ஒளிபரப்பு நேரம்

இலங்கை ரூபவாஹினியில் பிரதி திங்கள் மற்றும் வியாழக்கிழமை தோறும் இரவு 9.30 மணிக்கு.

ஐ அலை வரிசையில் பிரதி செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிமைகளில் மு.ப 8.00 மணிக்கு

### 3. கெலக்ஸி ஸ்டார்

#### லொத்தர் சீட்டின் வழிமுறை

ஒரு இயந்திரத்தில் 60 பந்துகளில் இருந்து நான்கு (04) வெற்றி இலக்கங்கள் தெரிவு செய்யப்படும்.

தனியான இயந்திரத்திலிருந்து 12 இலக்கங்களில் ஒரு (01) பந்தின் மூலம் நட்சத்திர அடையாளம் ஒன்று தெரிவு செய்யப்படும்.

#### பரிசு அமைப்பு

| இணைப்பு | பரிசு (ரூபா) |
|---|---|
| எந்தவொரு இலக்கத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு நட்சத்திர அடையாளத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு இலக்கம் + நட்சத்திர அடையாளம் | ரூபா 60.00 |
| எந்தவொரு 02 இலக்கங்கள் | ரூபா 40.00 |
| 02 இலக்கங்களும் + நட்சத்திர அடையாளமும் | ரூபா 200.00 |
| எந்தவொரு 03 இலக்கங்கள் | ரூபா 1,000.00 |
| 03 இலக்கங்களும் + நட்சத்திர அடையாளமும் | ரூபா 10,000.00 |
| 04 இலக்கங்கள் | ரூபா 500,000.00 |
| சகல 04 இலக்கங்களும் + நட்சத்திர அடையாளமும் | ரூபா 2,000,000.00 |

#### சீட்டிழுப்புத் திகதி

கெலக்ஸி ஸ்டார் அதிஷ்டச் சீட்டிழுப்பு ஒவ்வொரு ஞாயிறு மற்றும் புதன் கிழமைகளில் நடைபெறும்.

#### ஒளிபரப்பு நேரம்

இலங்கை ரூபவாஹினி முதலாம் அலைவரிசையில் ஞாயிறு

மற்றும் புதன் கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு

நேத்ரா அலைவரிசையில் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை 08.00 மணிக்கு

## 4. நியத்த ஜய

### லொத்தர் சீட்டின் வழிமுறை

ஒரு இயந்திரத்திலிருந்து 65 பந்துகளில் நான்கு (04) வெற்றி இலக்கங்கள் தெரிவு செய்யப்படும்.

தனியான இயந்திரம் ஒன்றிலிருந்து 26 ஆங்கில எழுத்துக்களில் ஒரு (01) ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்படும்.

### பரிசு அமைப்பு

| இணைப்பு | பரிசு (ரூபா) |
|---|---|
| எந்தவொரு தனி இலக்கத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு ஆங்கில எழுத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு 02 இலக்கங்கள் | ரூபா 60.00 |
| எந்தவொரு 03 இலக்கங்கள் | ரூபா 1,000.00 |
| சகல 4 இலக்கங்களும் | ரூபா 1,000,000.00 |
| எந்தவொரு இலக்கமும்+ஆங்கில எழுத்தும் | ரூபா 40.00 |
| எந்தவொரு 02 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 1,000.00 |
| எந்தவொரு 03 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 50,000.00 |
| 04 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 10,000,000.00 |

### சீட்டிழுப்புத் திகதி

மஞ்சள் நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு செவ்வாய் மற்றும் நீல நிற லொத்தர் சீட்டிழுப்பு வெள்ளி தோறும் இடம்பெறும்.

### ஒளிபரப்பு நேரம்

இலங்கை ரூபவாஹினியின் முதலாம் அலைவரிசையில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இரவு 9.45 மணிக்கு

நேத்ரா அலைவரிசையில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் காலை 08.00 மணிக்கு

4 இலக்கங்கள் + ஆங்கில எழுத்து ரூபா 10,000,000.00

## 5. லக்ன வாசனா

### லொத்தர் சீட்டின் வழிமுறை

முதலாவது கட்டம் - 61 பந்துகளில் 04 தெரிவு செய்யப்படும்.

2வது கட்டம் - 12 இராசி அடையாளங்களில் ஒன்று தெரிவு செய்யப்படும்.

### பரிசு அமைப்பு

| இணைப்பு | பரிசு (ரூபா) |
|---|---|
| இராசி அடையாளம் | ரூபா 20.00 |
| எந்தவொரு தனி இலக்கத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு 02 இலக்கங்கள் | ரூபா 40.00 |
| எந்தவொரு 03 இலக்கங்கள் | ரூபா 1,000.00 |
| சகல 4 இலக்கங்களும் | ரூபா 500,000.00 |
| எந்த 1 இலக்கம் + இராசி அடையாளம் | ரூபா 60.00 |
| எந்த 2 இலக்கங்கள் + இராசி அடையாளம் | ரூபா 200.00 |
| எந்த 3 இலக்கங்கள் + இராசி அடையாளம் | ரூபா 10,000.00 |
| 4 இலக்கங்கள் + இராசி அடையாளம் | ரூபா 2,000,000.00 |

### சீட்டிழுப்புத் திகதி

நீல நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு செவ்வாய், சிவப்பு நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு வெள்ளி மற்றும் ஊதா நிற சீட்டிழுப்பு ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும்.

### ஒளிபரப்பு நேரம்

இலங்கை ரூபவாஹினியில் செவ்வாய் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கும், நேத்ரா அலைவரிசையில் வெள்ளிக்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கும்.

## 6. சுப்பர் போல்

### லொத்தர் சீட்டின் வழிமுறை

ஒரு இயந்திரத்திலிருந்து 73 பந்துகளில் நான்கு (04) வெற்றி இலக்கங்கள் தெரிவு செய்யப்படும்.

தனியான இயந்திரத்திலிருந்து 26 ஆங்கில எழுத்துக்களில் ஒரு (01) ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்படும்.

### பரிசு அமைப்பு

| இணைப்பு | பரிசு (ரூபா) |
|---|---|
| எந்தவொரு ஆங்கில எழுத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு இலக்கத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு 02 இலக்கங்கள் | ரூபா 100.00 |
| எந்தவொரு 03 இலக்கங்கள் | ரூபா 2,000.00 |
| சகல 4 இலக்கங்களும் | ரூபா 1,000,000.00 |
| எந்தவொரு இலக்கமும்+ஆங்கில எழுத்தும் | ரூபா 40.00 |
| எந்தவொரு 02 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 1,000.00 |
| எந்தவொரு 03 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 20,000.00 |
| சகல 04 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 40,000,000.00 |

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

### சீட்டிழுப்புத் திகதி

நீல நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு சனி, பச்சை நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு வியாழன் மற்றும் ஊதா நிற சீட்டிழுப்பு திங்கட்கிழமை நடைபெறும்.

### ஒளிபரப்பு நேரம்

இலங்கை ரூபவாஹினியில் திங்கட்கிழமை இரவு 9.45 மணிக்கு

## 7. சன்வர்தன லக்ஷபதி

### லொத்தர் சீட்டின் வழிமுறை

மூன்று (03) வெற்றி இலக்கங்கள் - ஒரு இயந்திரத்திலுள்ள 50 பந்துகளிலிருந்து மூன்று (03) வெற்றி இலக்கங்கள் தெரிவு செய்யப்படும்.

### பரிசு அமைப்பு

| இணைப்பு | பரிசு (ரூபா) |
|---|---:|
| எந்தவொரு தனி இலக்கத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு 02 இலக்கங்கள் | ரூபா 200.00 |
| எந்தவொரு 03 இலக்கங்கள் | ரூபா 100,000.00 |

### சீட்டிழுப்புத் திகதி

சிவப்பு நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு ஒவ்வொரு திங்கள் கிழமைகளிலும் இடம்பெறும்.

### ஒளிபரப்பு நேரம்

இலங்கை ரூபவாஹினியில் திங்கட்கிழமை இரவு 9.45 மணிக்கு

## 8. கோட்டிபதி சனிதா

### லொத்தர் சீட்டின் வழிமுறை

1வது கட்டம் - 30 பந்துகளிலிருந்து நான்கு இலக்கங்கள் தெரிவு

2வது கட்டம் - 26 ஆங்கில எழுத்துக்களில் ஒரு எழுத்து தெரிவு

### பரிசு அமைப்பு

| இணைப்பு | பரிசு (ரூபா) |
|---|---:|
| எந்தவொரு தனி இலக்கத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு ஆங்கில எழுத்திற்கும் | ரூபா 20.00 |
| எந்தவொரு இலக்கமும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 40.00 |
| எந்தவொரு 02 இலக்கங்கள் | ரூபா 100.00 |
| எந்தவொரு 02 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 1,000.00 |
| எந்தவொரு 03 இலக்கங்கள் | ரூபா 2,000.00 |
| எந்தவொரு 03 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 20,000.00 |
| சகல 04 இலக்கங்களும் | ரூபா 1,000,000.00 |
| 04 இலக்கங்களும் + ஆங்கில எழுத்தும் | ரூபா 75,000,000.00 |

### சீட்டிழுப்புத் திகதி

செவ்வாய்க்கிழமைகளில் ஊதா நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு, வெள்ளிக்கிழமைகளில் இளஞ் சிவப்பு நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு, ஞாயிற்றுக்கிழமைகளில் பச்சை நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு

### ஒளிபரப்பு நேரம்

இலங்கை ரூபவாஹஹினியில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இரவு 10.00 மணிக்கு

## 9. அபிவிருத்தி அதிஷ்டம்

### லொத்தர் சீட்டின் வழிமுறை

1வது கட்டம் - 65 பந்துகளிலிருந்து நான்கு (04) இலக்கங்கள் தெரிவு

2வது கட்டம் - 12 மாதங்களிலிருந்து ஒரு மாதம் தெரிவு

3வது கட்டம் - ஆறு (06) இலக்கங்களில் இருந்து ஒன்று (01) தெரிவு

### பரிசு அமைப்பு

| இணைப்பு | பரிசு (ரூபா) |
|---|---:|
| எந்தவொரு மாதம் | ரூபா 20.00 |
| எந்தவொரு இலக்கம் | ரூபா 20.00 |
| எந்த ஒரு இலக்கம் + அதிஷ்ட மாதம் | ரூபா 40.00 |
| எந்தவொரு 02 இலக்கங்கள் | ரூபா 100.00 |
| எந்தவொரு 02 இலக்கங்கள் + அதிஷ்ட மாதம் | ரூபா 200.00 |
| எந்தவொரு 03 இலக்கங்கள் | ரூபா 1,000.00 |
| எந்தவொரு 03 இலக்கங்கள் + அதிஷ்ட மாதம் | ரூபா 5,000.00 |
| 04 இலக்கங்கள் | ரூபா 500,000.00 |
| 4 இலக்கங்கள் + சுப்பர் இலக்கம் | ரூபா 1,000,000.00 |
| எந்தவொரு 04 இலக்கங்கள் + அதிஷ்ட மாதம் | ரூபா 2,000,000.00 |
| எந்தவொரு 04 இலக்கங்கள் + அதிஷ்ட மாதம் + சுப்பர் இலக்கம் | ரூபா 5,000,000.00 |

### சீட்டிழுப்புத் திகதி

வியாழக்கிழமைகளில் நீல நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு, சனிக்கிழமைகளில் இளஞ்சிவப்பு நிற அதிஷ்டச் சீட்டிழுப்பு

### ஒளிபரப்பு நேரம்

இலங்கை ரூபவாஹினியில் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் இரவு 10.00 மணிக்கு

# நிலைபேற்றுத்தன்மை அறிக்கை

# நிலைபேற்றுத்தன்மை அறிக்கை

## முக்கிய பெறுமானங்களும் நிலைபேற்றுத்தன்மையும்

அபிவிருத்தி லொத்தர் சபை - வறுமை ஒழிப்பு, கல்வித்துறை அபிவிருத்தி என்பனவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து, நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதை முக்கிய கடமையாகக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, சகல பங்காளிகளுக்கும் நன்மையளிக்கும் வகையில், நிலைபேறான வர்த்தக வழிமுறையை உருவாக்கவென நாம் தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். எமது வர்த்தக நடவடிக்கைகளின் தாக்கம் சம்பந்தமாக மிகக் கவனமாக நாம் ஆராய்வது வழக்கம். எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வகையில், இந்தப் பொறுப்பை நாம் கொண்டுள்ளோம். எமது வாடிக்கையாளர்கள், சேவையாளர்கள், விநியோகத்தர்கள், பங்காளிகள், எமது சமூகத்தினர் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படச் செய்யவும், சுற்றாடல் மற்றும் சமூகத்தின் மேம்பாட்டிற்கென நாம் இதனை நிறைவேற்றியுள்ளோம். எமது நிலைபேற்றுத் தன்மை நிகழ்ச்சி நிரல் சேவையாளர்களின் வேலைத்தளத்தில் பால் சமத்துவம் மற்றும் சமூக ஈடுபாடு என்பனவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

## மனிதவள அபிவிருத்தி

எமது சேவையாளர்கள் அனைவரும் எமது மாபெரும் சொத்துக்களாவர். அவர்களின் சிறந்த வாழ்க்கையும், சொந்த முறையிலான முன்னேற்றமும் எமது வர்த்தக நடவடிக்கைகளிலும் வாடிக்கையாளர் தொடர்பிலும் இறுதியாக இலாபமீட்டும் தன்மையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாக, பாரியளவிலான சமூக முன்னேற்றம் ஏற்படும். இந்த நோக்கத்தை அடைவதற்கென சேவையாளர்கள் தத்தமது இலக்கை அடைவதற்கும், உந்து சக்தியைப் பெறுவதற்கு உதவுமென பல்வேறு நோக்கங்களை நாம் நடைமுறைக்கிட்டுள்ளோம்.

## சேவையாளர் அபிவிருத்தி நோக்கங்கள்:

- தொழில் மற்றும் வேலை வசதி சந்தர்ப்பங்களை உருவாக்கி அபிவிருத்தி செய்தல்
- சேவையாளர் திட்டமிடல் மற்றும் திறன் முகாமைத்துவத் திட்டங்கள், தகுதியானவரை ஆட்சேர்த்தல், அவர்களை தொடர்ந்தும் வேலையில் வைத்திருக்கும் நடவடிக்கைகள், தலைமைத்துவ அபிவிருத்தி, தொடர்ச்சியாக வேலைக்கு அமர்த்தும் திட்டம், நீண்ட கால அடிப்படையில் அறிந்துகொள்ளல்.
- சேவையாளர்களின் பெறுபேறுகள் சம்பந்தமாக அவர்கள் பாராட்டப்படுவதையும், உந்துசக்தி வழங்கப்படுவதையும் நிச்சயித்தல்
- சகல விடயங்களையும் சேவையாளர்கள் அறிந்திருப்பதையும் அறிய வைக்கப்படுவதையும் நிச்சயித்தல்.
- வேலைத்தளத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம சந்தர்ப்பம் கிடைப்பதை நிச்சயித்தல்

## பயிற்சித் திட்டம் (உள்நாடு) 2016

| இல | திகதி | நிறுவனத்தின் பெயர் | பயிற்சியின் விபரம் | பங்குபற்றிய அதிகாரிகளின் பெயர் | பிரிவு | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2016.03.07 | இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவகம் (SLIDA) | "டொக்டர் அன்ட் அக்டர்" ஒருமுகப் பயிற்சி அனுபவத்தைப் பிரதிபலிக்கும் நெடுங்கதை | பொது முகாமையாளர்<br>பிரதிப் பொது முகாமையாளர் (நிதி முகாமையாளர்)<br>உதவிப் பொது முகாமையாளர் (நிதி முகாமையாளர்) | சிரேஷ்ட MGT | 01 நாள் |
| 2 | 2016.04.04 | பிராக் நிறுவகம் | உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளும் காசோலைகளும் | திருமதி எஸ்.பி.எச்.புஷ்பகுமாரி<br>திரு. கே.என்.ரி.விஜேசேகர<br>செல்வி கே.ஜயசிங்ஹாராச்சி | நிதி | 01 நாள் |
| 3 | 2016.06.09,10 | கட்டட நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) | மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் செயற்பாடும் பராமரிப்பும் | திரு. எஸ்.ஏ.டி.குணசேகர<br>திரு. டப்ளியூ.ஜீ.டி.ரொட்றிகோ | நிர்வாகம் | 02 நாள் |
| 4 | 2016.06.14,21,28 | தேசிய தொழிற் கல்வி நிறுவகம் | பெறுகைக்கான வழிமுறைகள் | செல்வி டப்ளியூ.ஏ.வீ. சி.சோமரத்ன<br>திரு. ரீ.கசுன் ஜயசூரிய | நிதி | 03 நாள் |

| இல | திகதி | நிறுவனத்தின் பெயர் | பயிற்சியின் விபரம் | பங்குபற்றிய அதிகாரிகளின் பெயர் | பிரிவு | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 5 | 2016.06.29 | அபிவிருத்தி லொத்தர் சபை | தலைமைத்துவப் பயிற்சி | திரு. எம்.கே.விமலரத்ன<br>திரு. டப்ளியூ.ஏ.தினுஷ லக்மால்<br>திரு. ஏ.பி.ஜீ.லாசரஸ்<br>திரு. எம்.டப்ளியூ.கே.எஸ். பெரேரா<br>திரு. ஜகத் முதன்நாயக்க<br>திரு. ஜனித் தமிந்த<br>செல்வி சார்லட் தமயந்தி<br>திருமதி டப்ளியூ.எம். பிரார்த்தனா<br>செல்வி எம்.வீ.ஏ.மதுஷானி<br>திருமதி அநுராதா கொடகம்பல<br>செல்வி பி.ஏ.திலினி பூமிக்கா<br>திருமதி சேபாலிகா பிரேமதிலக<br>திருமதி பி.துஷாரி பெரேரா<br>செல்வி ஹன்சமாலி சப்புதந்திரி<br>செல்வி ஷாலினி பிரபோதிகா<br>செல்வி துஷானி நதீஷா<br>செல்வி சத்துரி லசந்தி பெரேரா<br>செல்வி ஹிமன்ஷா காயத்ரி<br>செல்வி கே.எம்.என்.எம். கருணாநாயக்க<br>செல்வி கே.ஜயசிங்காராச்சி<br>திருமதி பவித்ரா கொடிக்கார<br>திருமதி ஹிமாலி விதானகே<br>திருமதி சி.கே.திசாநாயக்க<br>செல்வி பிரியங்கனி ராஜபக்ஷ | | |

இலங்கைக்குள் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், வெளிநாட்டுப் பயிற்சிகளையும் வழங்குவதன் மூலம் எமது ஊழியர்களின் அறிவையும் திறனையும் விரிவுபடுத்த நாம் உதவியுள்ளோம்.

## பயிற்சித் திட்டம் (வெளிநாடு) - 2016

| இல | திகதி | தேசத்தின் பெயர் | பயிற்சியின் விபரம் | பங்குபற்றிய அதிகாரிகளின் பெயர் | பிரிவு | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2016.02.26 - 03.05 | புரபா பல்கலைக்கழகம், சீன் சூக், சோன்புரி, தாய்லாந்து | தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் ஸ்தாபக மற்றும் திட்ட முகாமைத்துவத் திறமையின் நவீன கொள்கைகள் | உதவிப் பொது முகாமையாளர் (மு) திரு. கே.என்.புலத்சிங்கள<br>உதவிப் பொது முகாமையாளர் (நி) ஜே.ஏ.ரீ.கே.ஜயசூரிய | சிரேஷ்ட MGT | 10 நாள் |
| 2 | 2016.05.02 - 09 | மலேசியா | கொள்கைத் திட்டமிடல் மற்றும் நடைமுறை மதிப்பீடு பற்றிய சர்வதேச திட்டத்தில் பங்கு பற்றுதல் | பொது முகாமையாளர் திரு. ஜே.எம். சமன் ஜயசிங்க<br>உதவிப் பொது முகாமையாளர் (நி) திரு. நிஷான் பெரேரா | சிரேஷ்ட MGT | 08 நாள் |
| 3 | 2016.09.23 - 10.02 | மலேசியா | நவீன மயப்படுத்தலும் மாற்றமடை தலுக்குமான நிகழ்ச்சித் திட்டம் | பொது முகாமையாளர் திரு. ஜே.எம். சமன் ஜயசிங்க | சிரேஷ்ட MGT | 10 நாள் |
| 4 | 2016.10.20 - 10.30 | தாய்லாந்து | பயிற்சித் திட்டம் | உதவிப் பொது முகாமையாளர் (மு) திரு. சானக தம்மிந்த<br>உதவிப் பொது முகாமையாளர் (மு) திரு. சுனில் ஜயரத்ன | சிரேஷ்ட MGT | 10 நாள் |

# நிலைபேற்றுத்தன்மை அறிக்கை தொடர்ச்சி

## பால் சமத்துவம்

தேசிய அபிவிருத்தி இலக்குகளுக்கு பங்களிப்பாளர் என்ற வகையில், நீதியானதும் நிலைபேறானதுமான எதிர்காலத்தை அமைப்பதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படுவதில் அபிவிருத்தி லொத்தர் சபை நம்பிக்கை கொண்டுள்ளது. எமது ஆட்சேர்ப்பின் போதும் தொழிற்திறன் அபிவிருத்தி வழிமுறைகளின் போதும் பாலியல் சமத்துவத்தை அடைவதற்கு நாம் மேலதிக விசேட கவனம் செலுத்தி வருகின்றோம்.




## மருத்துவ உதவி

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த 82 விற்பனை பிரதிநிதிகளுக்கும் விற்பனை உதவியாளர்களுக்கும் அபிவிருத்தி லொத்தர் சபை மருத்துவ உதவியை வழங்கியுள்ளது. இதற்கமைய, இந்த வருடத்தில் மருத்துவ உதவிக்கென செலவிடப்பட்ட தொகை ரூபா 1.4 மில்லியன் ஆகும்.

## ஓய்வுக்கால நன்மைத் திட்டம்

அபிவிருத்தி லொத்தர் சபையின் சகல சேவையாளர்களும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தங்களது பங்களிப்பை வழங்குவது அவசியமாகும். 15% சபையினால் வழங்கப்படும் அதேசமயத்தில், 10% ஊழியர்களினால் வழங்கப்படுகிறது. அதேவேளை, ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% தொகை செலுத்தப்படுகிறது. அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிக்கொடைக்கான ஏற்பாடு 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளது.

## கூட்டிணைப்பு சமூகப் பொறுப்புணர்வு

நாட்டின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு பொருளாதார முன்னேற்றத்திற்கு பெறுமானத்தைச் சேர்க்கும் வகையில் 2016 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட அபிவிருத்தி இலக்குகளுக்கு ஆதரவளிக்கவென அபிவிருத்தி லொத்தர் சபை முக்கியமான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

முன்னாள் எல்.ரி.ரி.ஈ தரப்பினருக்கு புனர்வாழ்வளிக்கும் விதத்தில் வேலை வாய்ப்புக்களை வழங்கியமை.

2016 ஆம் ஆண்டின் முன்னாள் எல்.ரி.ரி.ஈ தரப்பினருக்கு வட மாகாணத்தில் விற்பனை நிலையங்களையும், தேவையான பயிற்சியையும் வழங்குவதில் அபிவிருத்தி லொத்தர் சபை 02 மில்லியன் ரூபாவை செலவிட்டது. இலங்கை இராணுவத்தினர் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்ட 20 எல்.ரி.ரி.ஈ தரைப்பினர் ஆகியோரின் உதவியுடன் நடத்தப்பட்ட இந்த திட்டம் இலாபகரமான வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது.

அதிஷ்டச் சீட்டு பரிசுகளின் மூலம் இலங்கை மக்களுக்கு நிலைபேறான பெறுமானத்தை வழங்குவதற்கு அர்ப்பணித்த அபிவிருத்தி நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டோம். அபிவிருத்தி லொத்தர் சபையின் சமூகப் பொறுப்புணர்ச்சியில் நம்பகமான வர்த்தகம், வாடிக்கையாளர் மற்றும் அதிஷ்டச் சீட்டு வெற்றியாளர் பாதுகாப்பு, சமூக முன்னேற்றத் திட்டங்கள் என்பன அடங்குகின்றன. அதேவேளை, அதன் கூட்டிணைப்பு நடவடிக்கைகளில் சூழல் தாக்கம் சம்பந்தமாகவும் அபிவிருத்தி லொத்தர் சபை கண்காணிப்பதோடு, சுற்றாடல் பொறுப்புணர்ச்சியைப் பூர்த்தி செய்யும் வகையில் சக்தி வள சேமிப்புத் திட்டங்களையும் சபை மேற்கொள்கிறது.

ஏனைய குறிப்பிடத்தக்க சமூக பொறுப்புணர்ச்சி நடவடிக்கைகள்

## முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் - ஆளணி தகவல் கோரிக்கைப் படிவம்

அமைச்சு : நிதி அமைச்சு

நிறுவனம் : அபிவிருத்தி லொத்தர் சபை

முகவரி : இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02

2015 டிசம்பர் 31 இல் ஆளணி தகவல்

| பதவி | விசேட நிலைமை | சம்பளக் கூறு | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | | ஒப்பந்தம் | தற்போதைய ஆளணி | | மாற்றிடம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | தற்காலிகம் | | நிரந்தரம் | தற்காலிகம் | |
| தலைவர் | | | 1 | | | 1 | | |
| பிரதித் தலைவர் | | | 1 | | | 1 | | |
| பொது முகாமையாளர் | | HM 2 - 1 | 1 | | | | | 1 |
| பிரதி பொது முகாமையாளர் | | HM 1 - 1 | 2 | | | 2 | | |
| உதவி பொது முகாமையாளர் | முகாமை | MM 1 - 1 | 9 | | | 7 | | |
| உள்ளகக் கணக்காய்வாளர் | | MM 1 - 1 | 1 | | | 1 | | |
| நிர்வாக அதிகாரி | நிர்வாகம் | JM 1 - 1 | 1 | | | 1 | | |
| போக்குவரத்து மற்றும் பராமரிப்பு முகாமையாளர் | | JM 1 - 1 | 1 | | | | | |
| பிரதம பாதுகாப்பு அதிகாரி | | JM 1 - 1 | 1 | | | 1 | | |
| சந்தைப்படுத்தல் அதிகாரி | | JM 1 - 1 | 6 | | | 6 | | |
| நிதித்துறை அதிகாரி | | JM 1 - 1 | 4 | | | 4 | | |
| வழிமுறை பகுப்பாய்வு/ திட்ட பகுப்பாய்வு அதிகாரி | | JM 1 - 1 | 1 | | | 1 | | |
| பெறுகை அதிகாரி | | JM 1 - 1 | 1 | | | 1 | | |
| மனிதவள அதிகாரி | | JM 1 - 1 | 1 | | | 1 | | |
| விற்பனை அபிவிருத்தி உதவியாளர் | | MA - 3 | 25 | | | 12 | 2 | |
| பொது உறவுகள் அதிகாரி | | MA - 3 | 1 | | | | 1 | |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | | MA -3 | 2 | | | 1 | | |
| நிதி உதவியாளர் | | MA 2 - 2 | 2 | | | | | |
| பிரதம முகாமைத்துவ உதவியாளர் | | MA 1 - 2 | 1 | | | 1 | | |
| ஆளணி உதவியாளர் | | MA-1-2 | 1 | | | | 1 | |
| முகாமைத்துவ உதவியாளர் | | MA 1 - 2 | 94 | | | 85 | 19 | |
| முகாமைத்துவ உதவியாளர் | தமிழ் | MA 1 - 2 | 2 | | | 3 | | |
| விற்பனை ஒருங்கிணைப் பாளர் (ஒப்பந்தம்) | | MA 1 -1 | 16 | | | | 14 | |
| சாரதிகள் | DS | PL - 3 | 34 | | | 32 | 4 | 1 |
| தொழிலாளர் / அலுவலக ஊழியர் | | PL - 1 | 41 | | | 47 | 14 | |
| மின்னியலாளர் | | PL - 1 | 1 | | | | | |
| பாதுகாப்பு அதிகாரி / உதவியாளர் | | PL - 1 | 3 | | | 16 | | |
| சட்ட அதிகாரி | | | | | | | 1 | |
| போக்குவரத்து ஆலோசகர் | | | | | | | 1 | |
| ஆலோசகர் | | | | | | | 3 | |
| மொத்தம் | | | 254 | 0 | 0 | 224 | 60 | 2 |

| வயதுப் பிரிவு (வருடம்) | ஊழியர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் |
| < 25 | 17 | 10 | 27 |
| 25 - 35 | 70 | 33 | 103 |
| 36 - 45 | 60 | 30 | 90 |
| 46 - 55 | 45 | 14 | 59 |
| > 55 | 5 | 2 | 7 |
| | 194 | 88 | 286 |

# கூட்டிணைப்பு ஆளுமை

அபிவிருத்தி லொத்தர் சபையின் நீண்டகால இலக்குகளுக்கும் முக்கிய திட்டங்களுக்கும் கூட்டிணைப்பு ஆளுமை வழிமுறை வழிகாட்டியாக அமைவதோடு, தீர்மானங்களை மேற்கொள்வதில் வழிமுறைகளையும், கொள்கைகளையும் வெளிப்படுத்தி சபைக்கு உதவுகிறது. முக்கியமாக, அரசாங்கம், சபை, நிறைவேற்று முகாமைத்துவ மட்டங்கள் போன்ற பல்வேறு மட்டங்களில் பிரிந்து காணப்படும் அதிகாரபூர்வத் தன்மை, கணக்கியல் தன்மை என்பனவற்றை கூட்டிணைப்பு ஆளுமை விபரிக்கிறது. கூட்டுத்தாபனத்திற்கான கூட்டிணைப்புக் கொள்கையை சபை தெரிவித்து, வர்த்தக நடவடிக்கைகளின் செயற்பாட்டுக்கு பொறுப்பாக உள்ள பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகள் ஆகியோருக்கு முக்கிய வழிகாட்டல்களையும் வழங்குகிறது.

கூட்டிணைப்பு ஆளுமைக் கொள்கைகள் மற்றும் நிபந்தனைகள் என்பன கீழ்க்காணும் விதத்தில் கூட்டிணைப்பு பங்களிப்பையும் பொறுப்புணர்ச்சியையும் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

- கூட்டிணைப்பு ஆளுமை வழிமுறை
- சபை / நிறைவேற்று முகாமைத்துவ உறவு
- பிரதம நிறைவேற்று அதிகாரியின் பொறுப்பு
- கூட்டிணைப்பு முக்கிய திட்டங்கள்
- கூட்டிணைப்பு செயற்பாட்டு முகாமைத்துவம்
- உள்ளக கணக்காய்வு
- பணிப்பாளர் சபையும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் செலவினங்களும்
- இடர் முகாமைத்துவம்
- கூட்டிணைப்பு சமூகப் பொறுப்புணர்ச்சி
- வர்த்தக நடவடிக்கைத் திட்டங்களும் பாதீட்டு அங்கீகாரமும்

## பணிப்பாளர்கள் சபை

பணிப்பாளர் சபைக்கு அதன் தலைவரே தலைமை வகிப்பார். அவரே பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற நிலையில் நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்வார். உயர் மட்டத்தை வகிக்கும் இந்தச் சபை, அபிவிருத்தி லொத்தர் சபையின் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்தைக் கண்காணிக்கும் பொறுப்பையும் கொண்டுள்ளது.

சபை அதன் தலைவரையும், கீழ்க்காணும் வகையில் நியமிக்கப்பட்ட நான்கு பணிப்பாளர்களையும் கொண்டுள்ளது.

1. ஜனாதிபதி நிதியத்தின் பிரதிநிதி
2. மகாபொல நம்பிக்கை நிதியத்தின் பிரதிநிதி
3. நிதியமைச்சின் பிரதிநிதி
4. பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இரண்டு அங்கத்தவர்கள் (ஒருவர் தலைவராக இருக்க வேண்டும்)

## தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் பொறுப்புக்கள்

- கூட்டிணைப்பு ஆளுமை நிலவுவதை தலைவர் நிச்சயிப்பது அவசியம்
- சபைக் கூட்டங்களுக்கு தலைமைதாங்கும் அவர் சரியான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதை நிச்சயித்தல்
- சகல பணிப்பாளர்களும் சமமான முறையில் நடத்தப்படுவார்கள். அவர்களது விசேட அறிவின் அடிப்படையில் உச்சக்கட்ட பங்களிப்பை வழங்கி, ஆக்கபூர்வமான செயற்பாட்டை மேற்கொள்ள ஊக்கமளிக்கப்படல்.
- பிரதம நிறைவேற்று அதிகாரியாக தலைவர் இல்லா விட்டால், அவர் மேற்பார்வைக் கடமையை மாத்திரம் மேற்கொள்வதோடு, சாதாரண நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ளல்.
- சபையின் நடவடிக்கைகள் சம்பந்தமாக சகல தீர்மானங்களையும் மேற்கொள்ளும் அதிகாரம் சபைக்கு உள்ளதை தலைவர் நிச்சயித்துக்கொள்ளல்.
- பொறுப்புக்கள் தெளிவான முறையில் பிரிக்கப்பட்டிருப்பதை நிச்சயிக்கும் தலைவர், அதிகாரம் சமத்துவமாக இருப்பதற்கும் உதவுதல்

## பணிப்பாளர் சபையின் கடமைகள்

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு உடன்பட்ட வகையில் நிறுவனத்தின் மிகத்திறமையான முகாமைத்துவத்திற்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாக உள்ளது. வளங்களைப் பாதுகாத்தல், சரியான கணக்குகளைப் பேணுதல், சரியான அறிக்கைகள் தயாரிக்கப்படுவதை நிச்சயித்தல், முகாமைத்துவம் சம்பந்தமான சகல சட்டபூர்வத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படல் என்பனவற்றின் மூலம் இது பெற்றுக் கொள்ளப்படுகிறது.

கீழ்க்காணும் விடயங்கள் இடம்பெறுவதை சபை நிச்சயித்தல் வேண்டும்.

- நிறுவனத்தின் முக்கிய இலக்குகள் தயாரிக்கப் பட்டுள்ளமை, முக்கிய நோக்கங்களின் பெறுபேற்றுக்கென தலைமைத்துவத்தின் நடவடிக்கை
- குறித்த முக்கிய இலக்குகளை அடைவதற்கான முறையான தலைமைத்துவம் வழங்கப்படுகிறது.
- பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவக் குழுவினர் ஆகியோர் மூலம் தேவைப்படும் தொழிற்திறன், அறிவு மற்றும் தகைமை என்பன பெற்றுக்கொள்ளப்படல்.

- உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் என்பனவற்றிற்கான ஆக்கபூர்வமான வழிமுறை கடைப்பிடிக்கப்படல்
- நிறுவனத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்பார்வைக்கு உட்படுத்துதல்.

நிதித்துறை விடயங்கள் தொடர்பாக போதியளவு அறிக்கைகள் பங்குதாரர்களுக்கு வழங்கப்படுவதோடு, அவசியம் ஏற்படுகையில் ஒழுங்கான அடிப்படையில் கலந்துரையாடல்களும் இடம்பெறுகின்றன.

- வளங்களும் சொத்துக்களும் பொறுப்புணர்ச்சியுடன் உபயோகிக்கப்படுகின்றன.
- கணக்காய்வுக் குழு மற்றும் ஏனைய குழுக்களை சபை நியமிப்பதோடு, குணநலன் மற்றும் தார்மீக விடயங்களில் நன்னெறிக் கொள்கையை அறிமுகம் செய்து கூட்டிணைப்பு ஆளுமை வழிமுறையையும் கடைப்பிடித்தல்.
- சம்பந்தப்பட்ட சட்டங்கள், வழிகாட்டி நெறிகள், சுற்று நிருபங்கள் என்பனவற்றுக்கு இணைந்த வகையில் பணிப்பாளர் சபையினர் தங்களது நடவடிக்கைகளுக்கு பதில்சொல்லும் நிலையில் இருத்தல்.
- பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளின் செயற்பாடுகள் குறைந்தது வருடம் ஒரு தடவை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படல்.

## சபைக் கூட்டங்கள்

பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போது ஸ்தாபக அடிப்படையிலான நடவடிக்கைகள், பெறுபேறுகள் என்பன பாதீடு மற்றும் சம்பந்தப்பட்ட தரங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கான முறையிலும், தீவிரமாகவும் கண்காணிக்கப்படுவது வழக்கம். வழமையான நிகழ்ச்சி நிரல் கடைப்பிடிக்கப்படுவதோடு, சபையின் கவனத்தை விரிவான அடிப்படையில் பெறவேண்டிய ஏனைய விடயங்களும் அங்கு ஆராயப்படும். பொதுவாக சபை மாதம் ஒரு தடவை கூடும். தேவை ஏற்படும் சமயத்தில் விசேட கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தில் 08 கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றின் வரவு பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பணிப்பாளரின் பெயர் | பதவி | கூட்டங்களின் எண்ணிக்கை | சமூகம் | சமூகம் இன்மை |
|---|---|---|---|---|
| திரு. ரொமேஷ் ஜயவர்தன | தலைவர் / பிநிஅ | 12 | 12 | 00 |
| திருமதி ஆர்.ஜ. விமலசேன | பிரதித் தலைவர் | 12 | 12 | 00 |
| டொக்டர் விக்கிரம வீரசூரிய | ஜனாதிபதி செயலகம் மற்றும் மகாபொல புலமைப் பரிசில் நம்பிக்கை நிதிய ஆலோசகர் | 12 | 12 | 00 |
| திரு. எம்.எஸ்.டி. ரணசிறி | பணிப்பாளர் நாயகம், திறைசேரி நடவடிக்கைத் திணைக்களம், நிதியமைச்சு | 12 | 06 | 06 |
| திரு. டி.என். நாணயக்கார | ஜனாதிபதி செயலக மேலதிகச் செயலாளர் | 12 | 12 | 00 |

## அபிவிருத்தி லொத்தர் சபையின் குழுக்கள்

1. முகாமைத்துவக் குழு
2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு
3. கேள்வி சபைக் குழு
4. சேவையாளர் நலன்புரிக் குழு
5. விளம்பரக் குழு
6. அபிவிருத்தி லொத்தர் சபையின் கலை மற்றும் கலாசாரக் குழு

## இணக்க அதிகாரி

நிதிப் பிரிவின் தலைவர், நிதி பிரதிப் பொது முகாமையாளர் என்பவர் இணக்க அதிகாரியாக செயற்படுகிறார். ஒழுங்கமைப்பு சட்டங்கள், சபை சம்பந்தமான பிரமானங்கள் மற்றும் சட்டபூர்வத் தேவைகளுடன் இணங்குவதை நிச்சயிப்பது இவரது கடமையாகும்.

முகாமைத்துவம்

சபையின் நாளாந்தக் கடமைகள் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் தலைமையில் செயற்படும் உயர் முகாமைத்துவ மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள், இடர்களும் சந்தர்ப்பங்களும் இனங்காணப்பட்டுள்ளதையும் குறிப்பிட்ட காலத்திற்கும் பாதீட்டுக்கும் உட்பட்ட வகையில் இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையும் இந்தக் குழுக்கள் நிச்சயிக்கின்றன.

# இடர் முகாமைத்துவ அறிக்கை

அபிவிருத்தி லொத்தர் சபையின் வணிக முயற்சிகளில் திட்ட வட்டமான இடர் முகாமைத்துவம் ஒரு அடிப்படை விடயமாகும். சபையின் இடர் முகாமைத்துவ வழிமுறைகளில் இடரை இனங் காண்பதில் பொறுப்புணர்ச்சியுடன்கூடிய அணுகுமுறை மற்றும் கட்டுப்படுத்தல் என்பன அடங்குகின்றன. இடர் சம்பந்தமான விழிப்புணர்ச்சி, அதற்கு எதிரான நடவடிக்கைகள், அவற்றின் அடிப்படையிலான தீர்மானம் மேற்கொள்ளல் என்பனவற்றைக் கொண்டுள்ள பலமான இடர் முகாமைத்துவக் கலாசாரத்தைக் கொண்டிருப்பது எமது முக்கிய நோக்கமாகும். அபிவிருத்தி லொத்தர் சபையின் நீண்டகால நிலைபேறான தன்மையை நிச்சயிப்பதற்கென எமது இடர் முகாமைத்துவ வழிமுறைகளை நாம் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வோம்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் இடர் முகாமைத்துவ வழிமுறை - சம்பந்தப்பட்ட பங்காளிகள், முகாமைத்துவத்தினர், பணிப்பாளர் சபையினர் ஆகியோருக்கு உரிய தகவல்களை வழங்கும் வகையில் செயற்படுகிறது. நிறுவனத்தின் வணிகம், செயற்பாடு, வழிமுறை, சேவைகள் என்பன சம்பந்தமாக தீர்மானங்கள் மேற்கொள்வதில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரிவாக இது ஒப்பற்ற முறையில் உள்ளது.

முக்கியமான வணிக திட்டமிடலிலும் திட்ட முகாமைத்துவத்திலும் வர்த்தக வழிமுறைகள் மட்டத்திலும் ஏற்படும் இடர்களை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான இடையீடற்ற கீழ்க்காணும் அணுகுமுறையை இது வழங்குகிறது.

- வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் பிரிவுகளில் ஏற்படும் இடர்கள் சம்பந்தமாக பொதுவான விளக்கத்தை வழங்குதல்.
- தீர்மானம் மேற்கொள்வதற்கும் முன்னுரிமை அடிப்படையில் மேம்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமென ஏற்படக் கூடிய இடர்கள் சம்பந்தமாக சரியான முகாமைத்துவத்தை வழங்குதல்
- இந்த இடர்களை முகாமைத்துவம் செய்யவென சேவையாளர் மத்தியில் விழிப்புணர்ச்சியையும் பொறுப்புணர்ச்சியையும் ஏற்படுத்துதல்.

## ஸ்தாபக இடர் முகாமைத்துவத்தை உபயோகித்து இடர்களை முகமைத்துவம் செய்தல் (ERM)

அபிவிருத்தி லொத்தர் சபை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபக முகாமைத்துவ தரங்களைக் (ERM) கடைப்பிடிக்கிறது. திட்டமிடல், நடவடிக்கை மேற்கொள்ளல் என்பனவற்றின் போது, இடரை இனங்காணுதல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பனவற்றுக்கான வழிமுறைகளை சபை உபயோகிக்கிறது. விபத்து, நிதி, விசேட முக்கியத்துவம், செயற்பாடு மற்றும் ஏனைய இடர்கள் என்பன இந்த வழிமுறைக்கு உட்படுகின்றன.

சேவையாளர்கள், நட்புறவு அமைப்பினர், வாடிக்கையாளர்கள் உட்பட பங்காளிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்கென பலதரப்பட்ட தடை நடவடிக்கைகளை அபிவிருத்தி லொத்தர் சபையின் இடர் முகாமைத்துவ அமைப்பு மேற்கொண்டு நடைமுறைக்கிடுகிறது. இதன் மூலம் நீண்டகால வளர்ச்சி நிச்சயிக்கப்படுகிறது. இந்த நோக்கங்களை அடைவதற்கென கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகளாவன -

- சட்டபூர்வ வழிகாட்டி நெறிகளைக் கடுமையாகக் கடைப்பிடித்தலும் பலமான கூட்டிணைப்பு ஆளுமை கலாசாரமும்
- ஏற்படக்கூடிய இடரை முன்கூட்டியே இனங்கண்டு, விழிப்புணர்ச்சியையும் இடர் அறிவித்தல் வழிமுறையையும் மேற்கொள்ளல்
- நிறுவனத்தின் சகல மட்டங்களிலும் தீர்மானம் மேற்கொள்வதை ஊக்குவிக்கவென விரிவான, தெளிவான அமைப்புடன்கூடிய வழிமுறையை உபயோகித்தல்
- கலாசார மற்றும் மனிதாபிமான தனிநபர் இடர்களுக்கு வழிவகுக்கும் சகல அம்சங்களையும் கருத்திற்கொண்டு இவற்றுக்கு தீர்வு காண்பதில் இடர் முகாமைத்துவத்தில் விட்டுக்கொடுக்கும் தன்மையைப் பேணுதல்.

அபிவிருத்தி லொத்தர் சபை கீழே தெரிவிக்கப்பட்டவர்களில் குறிப்பிட்ட சில இடர்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

### பரிசு வழங்கல் இடர்

அதிஷ்டச் சீட்டிழுப்புக்களின் போது, சகல மட்டங்களிலும் தரமான பரிசு வழங்கல் வீதம் பேணப்படுவது அவசியமாகும். ஏற்படக்கூடும் என்ற காரணத்தின் அடிப்படையில் அதிகரித்த பரிசு வீதம் காரணமாக, காசுப்பாய்ச்சல் பாவிக்கப்படுவதே இந்த இடராகும். இதற்கு மேலதிகமாக, மேற்குறிப்பிட்ட இடர் சம்பந்தமாக அபிவிருத்தி லொத்தர் சபை அச்சக நிறுவனத்தினரிடமிருந்து காப்புறுதியையும் பெற்றுக்கொள்கிறது.

### பொருளாதார இடர்

அபிவிருத்தி லொத்தர் சபையின் வாடிக்கையாளர்களின் சீட்டிழுப்புக்களை வழங்கும் விதம் நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களினால் பெரிதும் பாதிக்கப்படுவது வழக்கம்.

### நிதித்துறை இடர்கள்

காசுப் பாய்ச்சலின் திறமையற்ற முகாமைத்துவம் மற்றும் நிதித்துறைத் தகவல்கள் என்பனவுடன் தொடர்புபட்ட இடர்கள் நிறுவனத்தின் இலாபமீட்டும் தன்மையையும் உன்னத நிலைமையையும் பாதிக்கக்கூடும். போதியளவு காப்புறுதியை நிச்சயித்தல், நிறுவனத்தின் சகல பகுதிகளிலும் செலவினக் கட்டுப்பாடு போன்ற வழிமுறைகளின் அடிப்படையில் அபிவிருத்தி லொத்தர் சபை பாரம்பரிய நிதித்துறை இடர் முகாமைத்துவ வழிமுறைகளைக் கடைப்பிடிக்கிறது.

### திரவத்தன்மை இடர்

உச்சக்கட்ட வரிசை (Tier) கொண்ட பரிசுகளின் முன்கூட்டிய நிலைமையினால் திரவத்தன்மை இடர் ஏற்படக் கூடும். இதனை ஈடு செய்யும் வகையில், அபிவிருத்தி லொத்தர் சபை உயர்மட்ட திரவச் சொத்துக்களை எப்போதும் கொண்டுள்ளது.

### செயற்பாட்டு இடர்

வழிமுறைகளின் தவறுகை, மனித தவறுகை, குற்றவியல் நடவடிக்கைகள், உள்ளக வழிமுறைகளின் தோல்வி என்பனவற்றின் மூலம் ஏற்படும் நட்டங்கள் செயற்பாட்டு இடர்களில் அடங்குகின்றன. இத்தகைய நிலைமை காரணமாக, வாடிக்கையாளர்களின் நம்பிக்கை பாதிக்கப்படுவதோடு, நிறுவனத்தின் தோற்றத்திற்கும் பங்கம் ஏற்படக் கூடும். செயற்பாட்டு இடர்களைக் குறைப்பதற்கென அபிவிருத்தி லொத்தர் சபை உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சியாகப் பலப்படுத்தி வந்துள்ளது. இதற்கு மேலதிகமாக, செயற்படு பிரிவுகள், வணிக வழிமுறைகள் மற்றும் பாரியளவிலான சேவைகள் என்பனவற்றில் அவ்வப்போது இடர் மதிப்பீடுகளை சபை மேற்கொள்கிறது. செயற்பாட்டு இடரின் அச்சுறுத்தலை விலக்குவதே இவற்றின் நோக்கமாகும்.

### நற்பெயருக்கு எதிரான இடர்

கட்புல ஊடகங்கள் பொதுமக்களின் அக்கறை என்பனவற்றில் அபிவிருத்தி லொத்தர் சபை தங்கியிருப்பதனால், அதன் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் நிலைமை உள்ளது. பொதுமக்களின் அக்கறையைத் தொடர்ந்தும் பேணுவதற்கென சந்தைப்படுத்தல் பிரசார நடவடிக்கைகளை சபை மேற்கொள்வதோடு, இந்த இடரை நீக்குவதற்கென சகல நடவடிக்கைகளையும் வெளிப்படையாக மேற்கொள்கிறது.

### சட்ட இடர்

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட சட்ட நடவடிக்கைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தவறுவதன் காரணமாக, சட்ட இடரினால் ஏற்படும் பாதிப்பு அதிகரிக்கிறது. இந்த நடவடிக்கைகளைக் குறைப்பதற்கென அங்கீகரிக்கப்பட்ட சட்டத்துறை நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு அபிவிருத்தி லொத்தர் சபை தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### தகவல் தொழில்நுட்ப இடர்

அபிவிருத்தி லொத்தர் சபையின் செயற்பாட்டு வழிமுறைகளின் முக்கியமான ஒரு பகுதி தகவல் தொழில்நுட்ப வழிமுறை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சரியான உரிய காலத்திலான தகவல்களாகும். தகவல் தொழில்நுட்ப வழிமுறையின் அமைப்பைத் தரமுயர்த்தவென அபிவிருத்தி லொத்தர் சபை நடவடிக்கைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை

2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நாம் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

## கணக்காய்வுக் குழுவின் அமைப்பு

கணக்காய்வுக் குழுவில் கீழ்க்காணும் இரண்டு நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1. | திரு.எம்.எஸ்.டி.ரணசிறி | தலைவர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு |
| 2. | திரு. டி.என்.நாணயக்கார | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர் |

கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் நடைபெறும் போது பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) உள்ளகக் கணக்காய்வாளர், நிர்வாக அதிகாரி மற்றும் தேவையான எனைய அதிகாரிகள் ஆகியோர் சமூகமளித்திருப்பது வழக்கம். குழுவின் அவதானி என்ற நிலையில் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் சமூகமளித்திருப்பார்.

## கணக்காய்வுக் குழுவின் கடமை

பங்காளிகளின் நலன்களையும் சபையின் சொத்துக்களையும் பாதுகாக்கவென உச்சக்கட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறையைப் பேணும்படி அபிவிருத்தி லொத்தர் சபை கோரப்பட்டுள்ளது. நிதியமைச்சினாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளினாலும் விடுக்கப்பட்ட வழிகாட்டி நெறிகளும் குழுவினால் கடைப்பிடிக்கப்படுகின்றன. 2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்தில் கணக்காய்வுக் குழு மேற்கொண்ட முக்கிய நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன:

1. வருடாந்த நிதி அறிக்கையின் இணக்கத்தையும் நேர்மையையும் அவதானித்தலோடு வெளியிடப்படுவதற்கு முன்னர் முக்கியமான நிதித்துறை அறிக்கைகளையும் தீர்வுகளையும் மீளாய்வு செய்தல். கணக்கியல் கொள்கைகள், குறிப்புக்கள், வழிமுறைகள், முக்கிய தீர்வுகள், சட்ட மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைகளுடனான இணக்கம் என்பனவற்றின் மீளாய்வு இதில் அடங்கும். மீளாய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு அதிபதி திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் கணக்காய்வுக் குழு ஆராய்ந்துள்ளது.

2. அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை உள்ளகக் கணக்காய்வாளர் அவ்வப்போது சமர்ப்பிப்பது வழக்கம். உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் இந்த வழிமுறைகளில் உள்ள பாதிப்பான அம்சங்களையும் வழிமுறைகளையும் வெளிப்படுத்துவதோடு, இவற்றுக்கான அபிவிருத்தி வழிமுறைகளையும் பரிந்துரை செய்கின்றன. பரிந்துரைகள் நடைமுறைக்கிடப்பட்ட பின்னர் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி கணக்காய்வுக் குழுவிற்கும் முகாமைத்துவத்தினருக்கும் அறிவிக்கப்படுகிறது. கணக்காய்வுக் குழு உள்ளக கணக்காய்வுப் பிரிவிலிருந்து ஒழுங்கான அடிப்படையில் அறிக்கைகளை பெற்றுக்கொள்கிறது. ஒவ்வொரு கணக்காய்விலும் பெற்றுக்கொள்ளப்பட்ட முக்கிய அம்சங்களின் தொகுப்பு முகாமைத்துவத்தினரின் கருத்துக்கள் என்பனவும் அறிக்கையில் இடம்பெறுவது வழக்கம். தவறுதலான அம்சங்கள் மீண்டும் இடம்பெறாது என்பதை நிச்சயிக்கவென கணக்காய்வு அவதானங்களும் தடை நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

3. உள்ளகக் கணக்காய்வு மற்றும் அரசாங்க கணக்காய்வுத் திணைக்களம் என்பனவற்றின் உதவியுடன் அபிவிருத்தி லொத்தர் சபையின் செயற்பாட்டு மற்றும் நிதித்துறைக் கட்டுப்பாடுகள், வழிமுறைகள் என்பனவற்றை இந்தக் குழு மதிப்பீடு செய்துள்ளது. செலவினத்திற்கான எல்லையை அங்கீகரித்தல், வருமான வழிமுறைகள், மூலதனச் செலவினம், கைச்சாத்திடும் அதிகாரிகள், தகவல் தொழில்நுட்ப செயற்பாட்டின் கட்டுப்பாடு மற்றும் அபிவிருத்தி, ஸ்தாபக அமைப்பு, கடைப்பிடிக்கப்படும் கொள்கைகள், கடமைகளை பிரித்துக்கொள்ளல், முகாமைத்துவத்தினரின் மீளாய்வு என்பன இதில் அடங்கும். சபையின் நிதி நிலைமை அறிக்கை மூலமான திரவத்தன்மை நிலைமை ஒழுங்கான அடிப்படையில் ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் கண்காணிக்கப்பட்டது. அப்போது இனங்காணப்பட்ட பற்றாக்குறைகள், அவற்றின் அபிவிருத்திக்கான பரிந்துரைகளுடன் சபைக்கு அறிவிக்கப்படும். அபிவிருத்தி லொத்தர் சபைக்கு வழங்கப்பட்ட COPE இன் பணிப்புரைகளுக்கும் இந்தக் குழு விசேட கவனத்தைச் செலுத்துவது வழக்கம்.

## கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை

2016 ஆம் ஆண்டில் ஆறு (06) கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றின் வரவு பற்றிய விபரம் கீழே தரப்பட்டள்ளது.

| பணிப்பாளரின் பெயர் | சமூகம் | சமூகம் இன்மை |
|---|---|---|
| திரு. எம்.எஸ்.டி.ரணசிறி | 06/06 | இல்லை |
| திரு. டி.என்.நாணயக்கார | 06/06 | இல்லை |



திரு. எம்.எஸ்.டி.ரணசிறி

தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

# நிதித்துறைத் தகவல்கள்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } பீயூ.ஆர்/எப்/டீஎல்பீ/1/16/எப்எஸ்1  ඔබේ අංකය / உமது இல. / Your No. }  දිනය / திகதி / Date } 2018 பெப்ரவரி 21

தலைவர்,
அபிவிருத்தி லொத்தர் சபை,

**அபிவிருத்தி லொத்தர் சபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1997 இன 20ம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2017 அக்தோபர் 27 திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla. Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

2

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

AGDSL

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

3

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை அபிவிருத்தி லொத்தர் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியிருந்த 10 கணக்கீட்டு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 25,342,964 இற்கான குறைபாடுகள் மற்றும் மீளாய்வாண்டு தொடர்பாக கணக்காய்வினால் சுட்டிக்காட்டியிருந்த குறைபாடுகளை சரிசெய்து திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2017 அக்தோபர் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

(i) மீளாய்வாண்டின் போது விற்பனவு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் கிரயம் ஆகிய ரூபா 22,973,877 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு உள்பாய்ச்சல் என பதியப்பட்டுள்ளது. அதேபோல் அச்சொத்துக்கள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 22,973,877 தொகைக்கான திரண்ட

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

பெறுமானத் தேய்வு ஒதுக்கம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசாக அசையாத விடயம் ஒன்றாக இலாபத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. எனினும் அதன் மூலம் தேறிய காசுப்பாய்ச்சலுக்கு பாதிப்பு ஒன்று ஏற்பட்டிருக்காத போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு தொழிற்பாடுகளில் மற்றும் முதலீட்டு தொழிற்பாடுகளில் விளைவு திரிபடைந்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ii) நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 05 இன் பிரகாரம், ஆண்டின் போது வட்டி பெறுவனவுகள் ரூபா 81,544,767 தொகை எனினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் வட்டி பெறுவனவு என ரூபா 80,395,703 தொகை காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 1,149,064 இற்கான பதவியணிக் கடன் வட்டி பெறுவனவுகள் காசு உள்பாய்ச்சல் என சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08

---

(i) முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவை வரிப் பொறுப்புக்கள் என ரூபா 1,557,163,004 இற்கான தொகை ஒன்று 2015 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உரிமைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால், சபையின் மொத்த உரிமைகள் ரூபா 519,726,031 இற்கான மறை பெறுமதி ஒன்றாக மாறியிருந்தது.

மேலும், 2016 ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த ரூபா 300,434,121 இற்கான நிலுவை வரித்தொகையை மீண்டும் உரிமைக்கு சீராக்கல் செய்யப்பட்டமையால் உரிமையின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 1,557,163,004 இற்கான வரிப் பொறுப்பு ரூபா 1,256,728,883 இற்கான மறை மீதி ஒன்றாக மாறியிருந்தது. இந்த கணக்கீட்டு செயற்பாடுகளின் காரணமாக சபையின் மொத்த உரிமைகள் மேலும் ரூபா 499,526,897 இற்கான மறை பெறுமதியாகியிருந்தது. எனினும் நியமத்தின் 42 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ii) நிதிமத்தின் 117 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக புரிந்துணர்வு ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காக போதியளவு கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்த வேண்டுமெனினும் சபையினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கொள்கைகள் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

— வரியிடல்
— நிதி உபகரணங்கள்
— செலுத்த வேண்டிய வெகுமதிகள்
— திரைப்பட ஸ்டுடியோ, கையடக்கத் தொலைபேசி, முச்சக்கர வண்டி பெறுமானத்தேய்வு கணிக்கும் விகிதாசாரம்

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 10**

நியமத்தின் 17 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்கள் வழங்குவதற்கான அங்கீகாரம் வழங்கப்படும் திகதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டுமெனினும் சபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

(i) நியமத்தின் 34 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், அவ்வவ் சொத்து வகுப்புக்கள், மூன்று வருடங்களுக்கு ஒருமுறை அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை மீள்மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியை கணக்குகளில் வெளிப்படுத்த வேண்டுமெனினும் சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள், பொறித்தொகுதிகள் ஆகிய சொத்துக்கள் 2012 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலம் வருடாந்த மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 115,033,174 தொகை கிரயத்தையுடைய நிலையான சொத்துக்கள் முற்றாக பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்டுள்ள மதிப்பீட்டுத் தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) நியமத்தின் 37 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஒன்றையொன்று சமமான தன்மையுள்ள சொத்துக்கள் ஒரு தொகுதியின் கீழ் கோவையிடப்பட வேண்டுமெனினும் சபையினால் அவ்வாறு செய்திருக்கவில்லை. முன்னைய ஆண்டுகளின் போதும் காணப்பட்ட இந்த நிலைமை மீளாய்வாண்டின் போதும் சரி செய்திருக்கவில்லை.

6

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் 63 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஊழியர் பணிக்கொடைக்கான பொறுப்புக்களை மற்றும் சொத்துக்களை வெவ்வேறாக இனங்கண்டு அவற்றை ஒன்றிற்கு ஒன்று மாற்றீடு செய்வதன் மூலம் ஏற்படும் தற்போதைய தேறிய பணிக்கொடைப் பெறுமதியை நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டியிருந்தது. எனினும் சபையினால் பணிக்கொடை சொத்துக்கள் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்களை நிதி நிலைமைக் கூற்றில் வேவ்வேறாகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆண்டு முதல் 2014 வரையான ஆண்டுகளுக்கான நிலுவை வருமான வரி ரூபா 221,541,899 தொகை கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வரிச் செலவுகள் என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 917,136,129 தொகையில் ரூபா 447,406,433 தொகை முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவை வரி என அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) 2015 ஆண்டிற்கான வரி மதிப்பீடு ரூபா 302,866,101 தொகை எனினும் கணக்குகளில் அதற்காக ரூபா 56,356,927 தொகை மாத்திரமே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 ஆண்டிற்கான குறை வரி ஒதுக்கம் ரூபா 246,509,174 தொகை எனினும், மீளாய்வாண்டின் போது ரூபா 166,863,795 மாத்திரம் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக 2015 ஆண்டிற்கான மேலும் ரூபா 79,645,379 இற்கான குறை வரி ஒதுக்கம் ஒன்று காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2016 ஆண்டிற்கான நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் என ரூபா 60,516,783 தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் உண்மையான நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூபா 61,002,877 தொகை ஆகக் காணப்பட்டமையால் ஆண்டிற்கான இலாபம் ரூபா 486,094 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2016 திசெம்பர் 31 திகதி வரை சபைக்கு காசாகக் கிடைக்கப் பெறாத டிக்கட் பத்திர விற்பனை பெறுமதியாகிய ரூபா 148,994,637 தொகை காசேட்டில் பெறுவனவு என பதிவு செய்திருந்தமையால் அப் பெறுமதியினால்

வங்கிக் கணக்கு மீதி மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. இதனை வங்கி இணக்கக் கூற்றில் தேறப்படாத பணம் என காட்டப்பட்டிருந்தது.

(ஊ) கட்டிடம் ஒன்றினை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,057,930 இற்கான மூலதனச் செலவு ஒன்று கட்டிட பராமரிப்புச் செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ஆண்டிற்கான இலாபம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) கட்டிடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 76,065 இற்கான பெறுமானத்தேய்வு பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

**2.2.4 நிகழக் கூடிய பொறுப்புக்கள்**

2001 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான வரிப் பொறுப்புக்களை தீர்க்கப்படாமையால் செலுத்துதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 1,289,590,835 இற்கான தண்டப்பணம் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 12,540,705 இற்கான 04 சொத்துக் கணக்கு மீதிகளும் கூட்டுத்தொகை ரூபா 229,173,159 இற்கான பொறுப்பு மீதியொன்றும் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 40,122,457 தொகைக்கான 03 செலவு மீதிகளும் ஆக மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 281,836,321 தொகை தொடர்பாக தேவையான உறுதிப்படுத்தல் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (i) | விற்பனவு கூடங்களுக்கான செலவு | 10,861,523 | சபை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இது வரை வழங்கியிருந்த விற்பனை கூடங்கள் அவை வைக்கப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | | | விலாசங்கள் உட்பட விரிவான தகவல்கள், விற்பனை கூடங்களை பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு (GRN) விற்பனை கூடங்கள் விநியோக அறிவித்தல் (GIN).<br><br>2016 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட விற்பனை கூடங்களுக்கான ஆரம்ப திட்டம், மேற்பார்வை திட்டம் மேற்பார்வை அறிக்கை. |
| (ii) | CCTV கமரா முறைமையைப் பொருத்துவதற்கான செலவு | 4,758,308 | உடன்படிக்கைகள், பெறுகைகள் கோவை. |
| (iii) | விற்பனை மேம்படுத்தல் விடயம் | 29,260,934 | மதிப்பீடு, களஞ்சிய வேண்டுகோள் பத்திரம் விநியோகிக்கப்பட்ட சாரார் தொடர்பான விபரம் மற்றும் பண்டங்களைப் பெற்றுக் கொண்டதற்கான உறுதிப்படுத்தும் கடிதங்கள். |
| (iv) | ஒப்பந்தவேலை மற்றும் நிர்மாண வேலைச் செலவு | 4,090,925 | ஒப்பந்த வேலைக்கான கொடுப்பனவு பதிவேடு, நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு முறைசார் விதமாக சொத்துக்கள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டதற்கான மற்றும் சபையினால் ஒப்புக் கொண்டதற்கான சான்றுகள். |
| (v) | திஸ்ஸமஹாராம காணி | 492,392 | வாடகை உடன்படிக்கை உருத்துறுதி மற்றும் பிரதேச செயலகத்தினால் பெற்றுக்கொண்ட காணியின் உரிமை பற்றிய உறுதிப்படுத்தல் ஆவணங்கள். |

9

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| | | | |
|---|---|---|---|
| (vi) | வரவேற்பு கவுண்டர் நிர்மாணித்தல் செலவு | 3,199,080 | பொறியியல் உசாத்துணை நிறுவனத்தினால் சமர்ப்பித்திருந்த மேலதிக வேலை மதிப்பீடு, வேலை பூர்த்தி செய்யப்பட்டதற்கான சான்றிதழ் மற்றும் வேலை பூர்த்தி செய்யப்பட்டு பெற்றுக் கொண்டதற்கான சான்றுகள். |
| (vii) | விற்பனை கடன்கொடுத்தோர் | 229,173,159 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள், கடன்கொடுத்தோர் உபபேரேடு / கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு, காலப்பகுப்பாய்வு. |
| | | ------------------ | |
| | | 281,836,321 | |
| | | ======== | |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் பணிப்பாளர் சபை பத்திரம் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு 2016 அக்தோபர் 20 திகதிய கடிதத்தின் மூலம் தலைவரை வேண்டிக்கொண்ட போதிலும் 2017 ஜூலை வரை அவ் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. அதே போல் பணிப்பாளர் சபை பத்திரங்கள் கணக்காய்விற்கு வேண்டுவதற்கான காரணத்தை அரச கணக்காய்வாளரிடம் வினவ வேண்டுமென பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவர் வினவினார் என தலைவரினால் 2016 நவம்பர் 29 திகதிய பீசீ/5/III இலக்க கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் மூலம் அரச நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக பாராளுமன்றத்திற்கு வழங்கியிருந்த அதிகாரத்தைப் போலவே 154 ஆம் உறுதிப்புரையின் மூலம் கணக்காய்வாளர் தலைமையதிக்கு கிடைத்துள்ள அதிகாரத்திற்கு சவால் ஏற்படுத்துவதாக அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களிலுள்ள ரூபா 10,535,573 இற்கான வியாபார கடன்பட்டோர்களுக்காக ரூபா 7,496,220 இற்கான தொகையொன்று ஐயக்கடன் என ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 23

வருடங்களை விட பழமைவாய்ந்த கடன் மீதி ஒன்றான ரூபா 2,520,000 தொகை மீண்டும் சபைக்குக் கிடைக்க கூடியதாக இருந்தது. வழக்குத் தீர்மானம் ஒன்றின் மூலம் விதிக்கப்பட்டிருந்த இந்த பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்து ஐயக்கடன் என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) வியாபார, வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சிலிருந்து பெற வேண்டியவை என காட்டப்பட்டிருந்த ரூபா 5,700,000 இற்கான வாடகை முற்பணம் 2003 ஆண்டு முதல் கணக்குகளில் முன் கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட போதிலும் சபையினால் வாடகை அடிப்படையில் கட்டிடமொன்று பயன்படுத்துவதாக அவதானிக்கப்படவில்லை. அதன் பிரகாரம், அப் பணத்தை அறவீடு செய்வதற்காக சபையினால் போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2013 ஆண்டில் உசாத்துணை கம்பனி ஒன்றிற்கு உசாத்துணை கட்டணமாக ரூபா 3,626,727 தொகையும், 2014 ஆண்டின் போது நாடாவில் பதிவு செய்யப்பட்ட தொலைபேசி (IVR) முறைமையொன்று தயாரிப்பதற்காக ரூபா 237,000 தொகையும் ஆக செலுத்தப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 3,863,727 தொகைக்கான முற்பணங்களுக்கான விடயங்கள் இது வரை பூர்த்தி செய்திருக்காததுடன் குறிப்பிட்ட பணத்தை திருப்பி பெறுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,547,138 தொகை பெறுமதியான ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) 2008 ஆண்டின் போது கொள்வனவ செய்திருந்த ரூபா 1,464,000 தொகை பெறுமதியான 10 வாயுசீராக்கல் பொறிகள் பண்டக் கணிப்பீட்டு சபையின் விதப்புரையின்றி ரூபா 20,000 இற்கான தொகையொன்றிற்கு அகற்றப்பட்டிருந்தது.

11

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

## 2.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டம் | |
| i. 18(3) ஆம் பிரிவு | பரிசு ஒதுக்கக் கணக்கில் மீதியாகும் பண மீதிகளை எதிர்காலத்தில் நடத்தப்படும் லொத்தர் பரிசு தவணைகளில் பரிசு வழங்குவதற்காக பயன்படுத்தப்பட வேண்டுமெனினும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 580,305,484 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அந்த முதலிடப்பட்ட பணத்தில் ரூபா 302,054,379 தொகையினை மீண்டும் பெற்று 2001 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை ரூபா 216,230,041 தொகைக்கான நிலுவை வரியை செலுத்துவதற்கும் ரூபா 76,000,000 தொகையினை மீளாய்வாண்டிற்கான வரியைச் செலுத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீதித் தொகை ரூபா 9,824,338 இனை இலங்கை வங்கியின் 0002695681 ஆம் இலக்க கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. |
| ii. 17(5) ஆம் பந்தி | • 06 மாதங்களை மிகைத்துள்ள பரிசுகளை பெறுவதற்கு முன்வராத பரிசுகளை விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தை ஏற்பாடுகளின் பிரகாரம் ஜனாதிபதியின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட |

12

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

வேண்டுமெனினும் அதற்கு முரணாக ரூபா 836,010 பெறுமதியான பரிசுகளை சபையின் நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

- பல வருட காலமாக உரிமை கோரப்படாத 634 பரிசுகள் சபையின் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. இதில் 14 பரிசுகளின் பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் மீதியான 620 பரிசுகள் தொடர்பாக ஜனாதிபதி நிதியம் இழந்துள்ள மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 3,512,157 தொகை ஆக இருந்தது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

------------------------------------------------

| | |
|---|---|
| நிதிப் பிரமாணம் 394(அ) மற்றும் 396 | ரூபா 11,110 பெறுமதியான செல்லுபடியாகாமல் செய்துள்ள 03 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(இ) 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவை

------------------------------------------------

| | |
|---|---|
| (i) வழிகாட்டல் 2.9.2 | படிவத்தின் ஆவணங்களை பரிசோதனை செய்யாமல் பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவுக்கு சமுகமளிக்கும் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 397,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

AGDSL

| | |
|---|---|
| (ii) வழிகாட்டல் 2.14.1 | ரூபா 5 மில்லியன் பெறுமதியான பண்டங்கள் கொள்வனவு செய்யும் போது சீல் வைக்கப்பட்ட 03 கூறுவிலைகள் அழைக்கப்பட வேண்டுமெனினும், 02 நிறுவனங்களில் இருந்து மாத்திரம் கூறுவிலை அழைக்கப்பட்டு ரூபா 599,995 தொகை பெறுமதியான 05 ஐ போன்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதே போல் ரூபா 10 மில்லியன் வரையான கொள்வனவின் போது குறைந்த பட்சம் 5 கூறுவிலைகள் அழைக்கப்பட வேண்டுமெனினும் ரூபா 6,680,000 தொகை பெறுமதியான 20,000 அச்சிடப்பட்ட குடைகள் கொள்வனவு செய்வதற்கு இரண்டு கூறுவிலைகள் மாத்திரம் அழைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் கையொப்பம் மற்றும் உத்தியோக முத்திரை வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) வழிகாட்டல் 3.4 | சந்தை விலையில் நேரடிக் கொள்வனவு (Shopping) மூலம் பண்டங்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யக்கூடிய உச்ச எல்லை ரூபா 500,000 தொகை எனினும் அந்த வரையறையை மிகைத்து விற்பனை கூடங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,350,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) வழிகாட்டல் 5.3.10 | ரூபா 4,090,625 தொகைக்கான பண்டங்கள் கொள்வனவு செய்யும் போது குறிப்பிட்ட விலைகூறல் செல்லுபடியாகும் காலத்தை மிகைத்து 27 நாட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 5,623,655 பெறுமதியான கொள்வனவின் போது உரிய விலைகூறல் செல்லுபடியாகும் காலத்தை மிகைத்து 43 நாட்கள் காலமொன்று வழங்கப்பட்டிருந்தது. |

14

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| | |
|---|---|
| (v) வழிகாட்டல் 8.13.4 | நடைபெறுவேலை ஒப்பந்த வேலை ஒன்றும் தொடர்பான 10 சதவீதத்தை மிகைத்த முரண்கள் தொடர்பாக தலைமை கணக்கு உத்தியோகத்தர், அவரினால் நியமனம் செய்யப்பட்ட தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் உதவியைப் பெற்று அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக விற்பனை பிரிவின் உள்ளக நிர்மாண விடயங்களுக்காக ஆரம்ப ஒப்பந்த வேலைத் தொகையில் 15.75 சதவீதத்தினால் மிகைத்ததற்காக தலைவரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (vi) வழிகாட்டல் 5.3.11 | 2016 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 9,291,645 தொகைக்கான 7 ஒப்பந்த வேலைகளுக்கான கூறுவிலையுடன் விலைகூறல் பாதுகாப்பு பிணை ஒன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (vii) வழிகாட்டல் 5.4.8 | 07 ஒப்பந்த வேலைகள் தொடர்பாக குறிப்பிட்டுள்ளவாறு ஏற்றுக்கொள்ளக் கூடிய நிறுவனங்களில் இருந்து செயலாற்றுகை பாதுகாப்பு பிணைகளை ஒன்று பெற்றிருக்கவில்லை. |
| (viii) வழிகாட்டல் 5.4.12 | பெறுமதி கூட்டியவரி அணவல் செய்வதற்காக பணம் செலுத்திய பின்னர் தொடர்ந்து வரும் மாதம் 15 திகதி அல்லது அதற்கு முன்னராக கொடுப்பனவு பற்றிய விபரங்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதி ஒன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமெனினும் 07 நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| | |
|---|---|
| (ix) வழிகாட்டல் 8.9.1 | ரூபா 250,000 பெறுமதியினை மிகைத்த வேலைகளுக்கான ஒப்பந்த வேலைகள் மற்றும் ரூபா 500,000 பெறுமதியினை மிகைக்கும் பண்டங்கள் மற்றும் சேவைகள் ஒப்பந்த வேலைகளுக்காக முறைப்படியான உடன்படிக்கைகள் எழுதப்பட்டு கையொப்பமிடப்பட வேண்டுமெனினும், மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5,623,655 தொகைக்கான காகிதாகிகள் கொள்வனவு ஒன்று மற்றும் 07 ஒப்பந்த வேலைகள் தொடர்பாக விதிக்கப் பட்டுள்ளவாறு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

(ஈ) பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள்

---

| | |
|---|---|
| (i) 2011 பெப்ரவரி 11 ஆம் திகதி PED/57 ஆம் இலக்கம் சுற்றறிக்கை | பொது முயற்சிகள் திணைக்களத்தில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் சிங்கள மற்றும் இந்து புதுவருட கொண்டாட்டங்களுக்காக ரூபா 500,000 இற்கான நன்கொடைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) 2015 மே 25 ஆம் திகதிய PED/1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தகைமைகள் பெற்றிருக்காத MM 1 - 1 சம்பளத் தொகுதியை சேர்ந்த 8 அலுவலர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவ் வாகனங்களுக்கான எரிபொருளுக்காக ரூபா 1,119,105 தொகை மற்றும் சாரதி சம்பளம் மற்றும் மேலதிக நேரச் சம்பளம் என மீளாய்வாண்டின் போது ரூபா 7,288,698 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை, 2015 ஜனவரி 31 திகதிய 28 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2015 நவம்பர் 12 திகதிய PED/LO/DLB/Gen/2015 இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பாட்டுக் குத்தகை முறையில் வாகனம் ஒன்று பெற்றுக்கொள்வதற்கு பதிலாக அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த வாடகை ரூபா 198,000 தொகை வீதப்படியாக சபையினால் ஜீப் வண்டி ஒன்று பெற்றிருந்தது. அதன் பிரகாரம் 2015 திசெம்பர் மாதம் முதல் மீளாய்வாண்டு செப்தெம்பர் வரை விதிக்கப்பட்ட வரையறையை மிகைத்து வாடகையாக ரூபா 790,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 1,783,386,637 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,727,063,739 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 56,322,898 தொகை எனப்படும் 3.3 சதவீத வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது. வெற்றி பெற்றவர்களினால் பெற்றுக்கொள்ளாத பரிசுகளை திருப்ப உரித்தாக்கியமையால் சபைக்கு கிடைத்திருந்த வருமானம் ரூபா 28,266,240 இனால் அதிகரித்திருத்தல் இந்த வளர்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 1,937,967,198 இற்கான மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2013 வருட இறுதியில் அங்கு சிறு அளவில் வளர்ச்சியொன்றினைக் காட்டியிருந்த போதிலும் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது. மீளாய்வாண்டின் நிதி விளைவுகளை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 3.3 சதவீத வளர்ச்சி ஒன்றினை பெற்றிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்கு செலுத்திய வரியை மீண்டும் சீராக்கல் செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 2,645,519,929 தொகைக்கான சபையின் பங்களிப்பு 2014 ஆண்டு வரை இடையறாது வளர்ச்சியடைந்திருந்தது. எனினும் 2015 ஆண்டின் போது அது ரூபா 3,247,754,540 தொகை வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

ரூபா 3,797,831,858 தொகை வரை மீண்டும் வளர்ச்சியடைந்திருந்தது. வரிக்குப் பின்னரான தேறிய இலாபத்தில் 2012 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 9.3 சதவீதம் முதல் 16 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்ட வெற்றி பெற்றவர்களுக்கு வழங்க வேண்டிய பரிசுகள் திருப்பி உரித்தாக்கல் அடங்கியிருந்தமையால் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றுதல் ஓரளவு தூரத்திற்கு வரையறையாகியுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் சபையின் செயற்பாடுகள் இலாபகரத் தன்மை மற்றும் திரவத்தன்மை என்பவற்றைக் காட்டும் விகிதாசாரங்கள் மீதான பகுப்பாய்வு ஒன்று கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | 2015 |
|---|---|---|
| | சதவீதம் | சதவீதம் |
| **செயற்பாடு** | | |
| விற்பனை விலைக்கு விற்பனை மற்றும் வினியோகச் செலவு | 24 | 23 |
| விற்பனை விலைக்கு விற்பனை கிரயம் | 58 | 57 |
| **இலாபகரத் தன்மை விகிதாசாரம்** | | |
| மொத்த இலாப விகிதாசாரம் | 42 | 43 |
| தேறிய இலாப விகிதாசாரம் | 12 | 14.5 |
| தேறிய இலாபத்திற்கு பரிசு உரித்தாக்கிய விகிதாசாரம் | 16 | 15 |
| தேறிய இலாபத்திற்கு வருமான வரி விகிதாசாரம் | 51 | 38 |
| **திரவத் தன்மை விகிதாசாரம்** | | |
| நடைமுறை விகிதாசாரம் | 1:2 | 1:2 |
| விரைவு விகிதாசாரம் | 1:2 | 1:2 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் சபையின் விற்பனை மற்றும் வினியோகச் செலவு, விற்பனவில் முறையே 23 சதவீதம் மற்றும் 24 சதவீதம் என உயர்ந்த பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது. மேலும், முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது சபையின் பாதீட்டு விற்பனை மற்றும் வினியோக செலவுகளை விட கூடுதலான உள்ளவாறான செலவுகளில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் உள்ளவாறான விற்பனை மற்றும் வினியோகச் செலவு மொத்த செயற்பாட்டு செலவுகளில் சதவீதமாக முறையே 89 சதவீதம் மற்றும் 90 சதவீதமாக இருந்தது. இவ்வாறு மிகை கிரயமொன்று மேற்கொள்ளல் சபைக்கு கிடைக்கும் தேறிய இலாபத்திற்கு நேரடியாகவே பாதிப்பதுடன் அது சனாதிபதி நிதியத்திற்கு மேற்கொள்ளும் பங்களிப்புக்கும் பிரதி கூலமான முறையில் தாக்கியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டின் போது உழைத்திருந்த தேறிய இலாபத்தில் 16 சதவீதமும் நுகர்வோருக்கு வழங்கப்பட வேண்டிய பரிசுகள் திருப்பி உரித்தாக்கல்களினை பிரதிநிதிப்படுத்தியது.

(இ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய வருமான வரியினை உரிய முறையில் செலுத்தாமையினால் நிலுவை வரிப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்ததுடன் இந்த நிலுவை வரித்தொகையினை தீர்ப்பதற்கு நேரிட்டுள்ளமையால் மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது வருமான வரி செலுத்துதல் தேறிய இலாபத்தில் சதவீதமாக முறையே 38 சதவீதம் மற்றும் 52 சதவீதம் என உயர்ந்த பெறுமதி ஒன்றினை பெற்றிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 3 வகையான புதிய லொத்தர்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தியமையால் லொத்தர் விற்பனை வருமானம் ரூபா 2,885,215,637 இனால் அதாவது 24 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் விற்பனை கிரயம் ரூபா 1,099,366,403 இனால் அதாவது 21 சதவீதத்தினால் அதிகரித்திருத்தல், மொத்த இலாப விகிதாசாரம் ஒரே விதமாக இருப்பதனை பாதித்திருந்தது.

(உ) கடந்த ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் நடைமுறை மற்றும் விரைவு விகிதம் 1:2 என சமமான பெறுமதி ஒன்றினைக் கொண்டிருந்ததுடன் சபையின் நடைமுறை சொத்துக்களை மிகைத்து நடைமுறை பொறுப்புக்கள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் போதும்

தொழிற்படு மூலதன முகாமைத்துவம் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருந்தது என அவதானிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளவாறு நடைமுறை சொத்துக்களிலுள்ள ரூபா 158,037,384 இற்கான மீதியொன்று உண்மையாகவே நடைமுறை சொத்துக்கள் என கணிக்க முடியாத சொத்துக்களாக காணப்பட்டமையால் அப் பெறுமதியை சீராக்கல் செய்த பின்னர் உண்மையான நடைமுறை விகிதாசாரம் 1:2.3 ஆகக் காணப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

### 3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்ட சம்பவங்கள்

சபையின் ஊழியர் ஒருவரினால் மீண்டும் சேவையில் அமர்த்தும் படி கோரி வழக்கு ஒன்றும், வெளி நிறுவனம் ஒன்றினால் பணம் செலுத்த புறக்கணித்தமையால் ரூபா 8,095,000 இற்கான நட்டஈடு ஒன்று கோரி வழக்கொன்றும் ஆக சபைக்கு எதிராக நீதிமன்றங்களில் 02 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த வழக்குகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் நிகழக்கூடிய பொறுப்புக்கள் என வெளிப்படுத்தியிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் குறிக்கோள்கள் பின்வருமாறு.

- ஜனாதிபதி நிதியத்திற்கு நிதி உருவாக்கும் கருமங்களுக்காக லொத்தர்கள் நடத்துதல் அல்லது அதற்காக நடவடிக்கை எடுத்தல்.
- அவ்வாறு பெற்றுக்கொள்ளும் நிதியங்களை ஜனாதிபதியின் நிதியத்திற்கு அனுப்புதல்.

மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது சபையினால் நடத்தியிருந்த 10 லொத்தர்களில் 851 தடவைகள் சீட்டிழுப்பு குலுக்கல் நடத்தியிருந்ததுடன், லொத்தர் விற்பனைகளின் மூலம் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 14,759,875,240 தொகையாகும். அதே

போல் ஆண்டின் போது சேகரித்த ரூபா 7,755,659,066 தொகையான பரிசுகள் என ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்த தொகை ரூபா 1,783,386,637 ஆகும்.

(ii) மேற்கூறிய வருமானத்தை சேகரிப்பதற்காக சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 12,475,080,593 இற்கான கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அக் கிரயத்தின் 3.08 சதவீதம் என ரூபா 384,232,565 தொகை பிரச்சார விடயங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(iii) சபையினால் லொத்தர்கள் விற்பனவின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 50 சதவீதம் பரிசுப் பணத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 166,388,074 பரிசு பெறுவோருக்காக பரிசுத் தொகையாக ரூபா 6,726,171,273 தொகை வழங்கியிருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் இணக்கம் செய்த போது 19 சதவீத வளர்ச்சி ஒன்று காணப்பட்டது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது ரூபா 283,820,540 தொகை பெறுமதியான பரிசுப் பணம் குறிப்பிட்ட வெற்றியாளர்களுக்கு வினியோகிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் லொத்தர் விற்பனைக்காக மேற்கொள்ளப்பட்ட பிரச்சார கிரயத்திற்கு ஒப்பாக பெற்றிருந்த விற்பனை வருமான செயலாற்றுகை பின்வருமாறு ஆகும்.

| லொத்தரின் பெயர் | விற்பனை வருமானம் | | | | பிரச்சாரச் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2015 | முரண் | சதவீதம் | 2016 | 2015 | முரண் | சதவீதம் |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | (நூற்றிற்கு) | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | (நூற்றிற்கு) |
| சனிதா வாசனா | 2,486 | 2,541 | (55) | (2.2) | 34 | 27 | 7 | 26.2 |
| அபிவிருத்தி / லக்ன வாசனா | 2,899 | 2,939 | (40) | (1.3) | 41 | 30 | 11 | 36.2 |
| ஜயோதா | 1,425 | 1,424 | 1 | 0.08 | 36 | 24 | 11 | 46.5 |
| ஜனஜய / | 1,137 | 1,099 | 38 | 3.4 | 28 | 28 | 0.4 | 1.5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கெலெக்ஸி ஸ்டார் | | | | | | | | |
| நியத ஜய | 1,241 | 1,176 | 64 | 5.5 | 49 | 26 | 23 | 86.9 |
| சூபர் போல் | 2,744 | 2,524 | 220 | 8.7 | 32 | 30 | 2 | 5.7 |
| அபிவிருத்தி லக்ஷ்டபதி | 1,000 | - | - | - | 50 | - | - | - |
| கோடிபதி சனிதா | 1,572 | - | - | - | 57 | - | - | - |
| அபிவிருத்தி வாசனா | 48 | - | - | - | 14 | - | - | - |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டிற்க ஒப்பாக மீளாய்வாண்டின் போது சனிதா வாசனா மற்றும் அபிவிருத்தி லக்ன வாசனா, லொத்தர்களின் பிரச்சார கிரயம் 26 சதவீதத்தின் மற்றும் 36 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் விற்பனை வருமானம் முறையே 2.2 சதவீதத்தினால் மற்றும் 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஜயோதா லொத்தரின் பிரச்சார கிரயம் 47 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் விற்பனை வருமானம் 0.08 சதவீதமான மிகவும் குறைந்த சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எனினும் விற்பனை வருமானம் 3.4 சதவீதத்தினால் அதிகரித்திருந்த கெலக்ஸி ஸ்டார் லொத்தரின் பிரச்சார கிரயம் 1.5 சதவீதத்தினால் மாத்திரமே அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் சபையினால் கூடிய தொகை பிரச்சார கிரயம் மேற்கொள்ளும் சில லொத்தர்களின் பிரச்சார கிரயத்தின் பயன்தரு தன்மை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்து.

(iii) சங்வர்த்தன வாசனா லொத்தர்களுக்கான விற்பனை வருமானத்தில் 29 சதவீத வழமையல்லாத பிரச்சார செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) சபையினால் லொத்தர்கள் அச்சிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்தின் மூலம் நெருங்கிய செயலாற்றுகை, விற்பனை செய்யப்படாமல் மீதியாக இருந்த லொத்தர்களின் காரணமாக குறைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 444,990,802 கிரயத்திற்கான 807,949,550 லொத்தர்கள் சபையினால் அச்சிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 40,991,700

22

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

கிரயத்தையுடைய 53,781,800 தொகை லொத்தர்கள் வினியோகத்தர்களினால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. ரூபா 18,830,000 கிரயத்தையுடைய 26,525,400 தொகை லொத்தர்கள் வினியோகிப்பவர்களுக்கு வழங்கப்படாமல் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டதுடன் அந்த லொத்தர்களின் அச்சுக் கிரயம் ரூபா 59,821,700 தொகையாக இருந்தது. அவ்வாறு மீதியாகும் லொத்தர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்க தேவையான திட்டங்கள் தயாரிப்பதற்கு முறையான நடைமுறையொன்று அமுல் நடத்துவதற்கு முகாமைத்துவத்திற்கு முடியாதிருந்ததுடன் அவை சபையின் செயலாற்றுகைக்கு நேரடியாக பாதித்திருந்தது.

(ஈ) சபையினால் வருடாந்தம் உழைக்கும் தேறிய இலாபம் ஏற்பாடுகளின் பிரகாரம் ஜனாதிபதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலவு வைக்கப்பட்ட தொகை ரூபா 1,783 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அதனை விற்பனை வருமானத்தில் 12 சதவீதமாக இருந்தது. அதே போல், 2014 ஆண்டின் போது சனாதிபதியின் நிதியத்திற்க செலவு வைக்கப்பட்ட தேறிய இலாபம் ரூபா 2,353 மில்லியன் தொகையாக இருந்ததுடன் அதனை விற்பனை வருமானத்தில் 19.17 சதவீதமும் 2015 ஆண்டின் போது 14.54 சதவீத பெறுமதியினையும் பெற்றிருந்தது. அதன் பிரகாரம், சபையினால் ஜனாதிபதி நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பங்களிப்பு விற்பனை வருமானத்தில் சதவீதமாக எடுத்த போது இடையறாது குறைவடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(உ) சபையினால் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றியிருந்த குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் அடங்கிய செயலாற்றுகை அறிக்கை 2017 ஜுன் வரை தயாரித்திருக்காததுடன் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் இலக்குகளை நெருங்கிய முன்னேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.

(i) 2016 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 3,375,000 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டிருந்த 100 விற்பனை கூடங்களை மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு இயலாதிருந்தது.

(ii) ரூபா 15,000 பெறுமதியான உச்ச மட்டத் தொகையொன்று விற்பனை பிரதிநிதிகளுக்கு செலுத்தும் அடிப்படையில் செய்து முடிப்பதற்கு திட்டமிட்டிருந்த 510 விற்பனவு கூடங்களில் மீளாய்வாண்டின் போது 122 விற்பனை கூடங்கள் அதாவது 23 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

(iii) கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் 2016 ஆண்டின் போது வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த 30 விற்பனைக் கூடங்கள் 2017 மார்ச் 31 திகதி வரையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) 2016 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்திருக்காத 20 விற்பனைக் கூடங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 800,000 தொகையொன்று சபை செலவழித்திருந்தது.

(v) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் விற்பனைக் கூடங்கள் நிர்மாணிப்பதற்காக தேவையான பணம் ரூபா 03 மில்லியன் தொகை எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 10 மில்லியனுக்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விதிக்கப்பட்டுள்ளவாறு வரித்தொகைகள் குறிப்பிட்ட ஆண்டுகளின் போது தீர்ப்பதற்கு முகாமைத்துவத்திற்கு இயலாமையினால் முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவை வரித்தொகைகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான வரித்தொகைகளை செலுத்துவதற்காக சபையிடம் காணப்பட்ட ரூபா 302,054,379 இற்கான 4 நிலையான வைப்புக்களை குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் திருப்பி எடுக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிலையான வைப்புக்கள் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 33,255,379 இற்கான வட்டி வருமானம் ஒன்றினை இழந்திருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதி வரை இவ்வாறு நிலுவை வரிப் பொறுப்புக்கள் ரூபா 1,306,945,943 தொகை இருக்கும் போது சபையினால் ரூபா 13,475,000 தொகையொன்று நன்கொடையாக பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கியிருந்தது. இவ்வாறு பாரிய அளவிலான நிலுவை வரியின் பொறுப்பு தொடர்பாக முகாமைத்துவத்தினால் வரிசை அமைச்சினை (நிதி அமைச்சு) அறிவுறுத்தியதாக அவதானிக்கப்படவில்லை. அத்துடன் ஆக்கபூர்வமற்ற செலவுகள் தொடர்பாக கட்டுப்பாட்டு ஒன்றும் அவதானிக்கப்படவில்லை.

24

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

**4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 09 லொத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 21 சீட்டிழுப்பு குலுக்கல் தவணைகளில் லொத்தர் ஒன்றின் அனுமதிக்கப்பட்ட பரப்பளவுகளில் லொத்தர்கள் அச்சிடப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டமையால் போலியான லொத்தர்கள் அச்சிடப்படுவதற்கு இடம் காணப்பட்டதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) போலியான லொத்தர்கள் சந்தைக்கு வரும் சமர்ப்பிக்கப்படும் ஆபத்தினை குறைப்பதற்காக சபையினால் முறையான வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தியிருப்பதாக அவதானிக்கப்படவில்லை. தற்போது செயற்படும் பாதுகாப்பு நடைமுறையாவது வர்ணக்கோடு மாதிரி ஒன்று லொத்தரின் முகப்புப் பக்கத்தில் அச்சிடுதல் எனினும் அவை லொத்தர்களின் பாதுகாப்பிற்கு போதியளவினதாக காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) சபையினால் 2008 ஆண்டின் போது ரூபா 8,095,000 தொகைக்கு வழங்குனர் நிறுவனமொன்றிலிருந்து பெற்றிருந்த கப் வண்டி அதே தினத்தில் இருந்தே காணாமல் போயிருந்த போதிலும் அந்த கப் வண்டியை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த வாகனம் சபையின் சொத்து ஒன்றென நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருந்த போதிலும் 2013 ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை அவ் வாகனத்தின் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 6,476,000 தொகையாகும். சபையின் செயற்பாட்டு விடயங்களுக்காக பயன்படுத்தப்படாத வாகனம் ஒன்றிற்காக வருடாந்தம் ரூபா 1,619,000 தொகை வீதம் பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு செயற்பாட்டுச் செலவுகள் என கணக்கீடு செய்திருத்தல் கணக்காய்வில் கேள்விக்குறியாகவுள்ளது.

(ஈ) ஒவ்வொரு லொத்தர் வகைக்கும் வழங்கப்பட வேண்டிய பரிசுகள் தொடர்பாக குறிப்பிட்ட தீர்மானத்திற்கு வந்து தேவையான திட்டங்களைத் தயாரிக்காமையின் காரணமாக சில லொத்தர்களுக்கான பரிசு ஒதுக்கக் கணக்கின் மீதி மறை பெறுமதி ஒன்றாக இருந்தது. சபையினால் செயற்படுத்தப்படும் 6 லொத்தர்களின் பரிசு ஒதுக்கக் கணக்கின் மீதி இவ்வாறு மறை பெறுமதியாக இருந்ததுடன் அப் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 75,877,900 தொகையாக இருந்தது. சில

லொத்தர்களுக்காக இடைஇடையே விஷேட பரிசுகள் வழங்குவதற்கு தீர்மானித்தல் இதற்கான அடிப்படைக் காரணமாக இருந்தது.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரவேற்பு கவுன்டர் நிர்மாணிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொறியியல் மதிப்பீடு ரூபா 3,450,900 தொகையெனினும் உள்ளவாறான செலவு ரூபா 2,258,251 தொகையாக இருந்தமையால் 53 சதவீதமுரண் ஒன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பொறியியல் மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள பெறுமதி சர்ச்சைகளை ஏற்படுத்துவதாக உள்ளது.

(ஆ) சட்ட ரீதியாக பதிவு செய்யப்படாத இணையத் தளத்திற்காக அதன் உரிமையாளர்களுக்கு லொத்தர் வியாபாரச் சின்னப் பெயரை பிரசாரம் செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,200,000 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இணையத்தளம் ஒன்றின் மூலம் லொத்தர் வியாபாரச் சின்னப் பிரசாரம் செய்தல் சபை எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டனவா என்பது சர்ச்சைக்குரிய தன்மையுள்ள காரணமொன்றாக இருந்தது.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 4,758,308 தொகை பெறுமதியான CCTV கமரா முறையை 2010 ஆண்டு முதல் செயற்படாமல் காணப்பட்ட போதிலும் அவற்றை அகற்றுவதற்காக பொருத்தமான வேலைத் திட்டமொன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) லொத்தர் வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்குவதற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 3,400,167 இற்கான பண்ட இருப்பொன்று பல வருட காலமாக களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் இந்தப் பண்டங்களை விற்பனை செய்து குறிப்பிட்ட பணத்தை ஜனாதிபதி நிதியத்திற்கு செலவு வைப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

26

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

(இ) ஓட்ட நிலையில் காணப்பட்ட ரூபா 1,353,872 தொகை பெறுமதியான 08 மோட்டார் சைக்கில்கள் பயன்படுத்தப்படாமல் சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகன தரிப்பிடத்தில் காணப்படும் போது மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது ரூபா 3,159,099 தொகை செலவிடப்பட்டு 13 மோட்டார் சைக்கில்கள் கொள்வனவ செய்யப்பட்டிருந்தது.

(ஈ) விற்பனை மேம்பாட்டு விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,216,325 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த 12,275 குடைகள் கணக்காண்டு இறுதி வரை உரிய முறையில் வினியோகம் செய்யாமல் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அதே போல் அரச நிறுவனங்களுக்கு வினியோகிப்பதற்காக ரூபா 68,250 தொகை பெறுமதியான 130 குடைகள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(உ) சபையினால் 2012 ஆண்டின் போது ரூபா 42,720,098 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த படக்காட்சி சாலை பயன்படுத்தபடாமல் அத் திகதி முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், இந்த படக்காட்சி சாலையின் பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 38,752,448 தொகை என ஆவணங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

### 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

விற்பனை மேம்பாட்டு பேரேட்டில் உள்ளடங்கியிருந்த ரூபா 227,514 தொகை பெறுமதியான 4 விற்பனை மேம்பாட்டு விடயங்கள் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது குறிப்பிட்ட பிரிவில் பௌதீக ரீதியாக அவை காணப்படவில்லை.

### 4.7 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

உணவகம் ஒன்று மற்றும் களஞ்சியமொன்று நிர்மாணிப்பதற்காக 2014 ஆண்டின் போது ரூபா 1,583,594 இற்கான ஆரம்ப செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தற்போது நிர்மாணவேலை ஒன்றும் மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன் அந்த செலவுகள் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் நடைபெறுவேலைகள் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.8 ஒப்பந்த நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரையான காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 42,720,098 தொகை பெறுமதியான படக்காட்சிச் சாலை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முன் சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று இன்றி வரைபு தயாரித்தல், பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.14.1 இன் பிரகாரம் செயற்படாமை மற்றும் வாயு சீராக்கிப்பொறி முறைமை மற்றும் ஒலிக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்காமையினால் படக்காட்சிக் சாலை பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது.

(ii) நிர்மாண வேலை தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு இயலுமான விதத்தில் ஒப்பந்த கிரயத்தை துண்டுகளாக்கி அவ்வப் பகுதிகளுக்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்டு வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்ட காரணத்தினால் கட்டிடத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட ஒரு சாராரை சாட்டக் கூடியதாக இருக்கவில்லை.

(iii) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காணப்பட்ட இலக்குகளின் பிரகாரம், படக்காட்சி சாலையின் குறைபாடுகள் சரிசெய்வதற்கு 2016 ஆண்டின் போது கூறுவிலைகள் அழைக்கப்பட்டு 2017 முதல் காலாண்டில் ஒப்பந்த வேலையை வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், 2017 ஜூன் 30 கணக்காய்வுத் திகதி வரையும் அதற்கான நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

(iv) மேற்கூறியவாறு காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக படக்காட்சி சாலையின் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன். அந்த வேலைகளை நிறைவேற்றுவதற்காக 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 115,200,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், தற்போது லொத்தர் விற்பனவில் ஈடுபட்டிருக்கும் தேசிய லொத்தர் சபை சபையின் படக்காட்சிசாலை சேவையை வழங்கி பாரிய இலாபமொன்றினை உழைப்பதற்கு இருந்த சந்தர்ப்பத்தையும் இழந்துள்ளது.

**4.9 முறைசார் விதமாக உரித்தாக்கப்படாத காணிகள் / ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

சபைக்கு சட்டரீதியான உரிமை காணப்படாத திஸ்ஸமஹாராமையில் அமைந்துள்ள சுற்றுலா விடுதி ஒன்று நிர்மாணிப்பதற்காக ஆரம்ப செலவாக ரூபா 492,392 தொகை சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.10 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த சபையின் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) 2003 ஜுன் 02 திகதிய PED/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 8.3.9 பிரிவின் பிரகாரம் அரச வணிக நிறுவனங்களுக்கு சொந்தமான பௌதீக மற்றும் மனித வளங்கள் வரிசை அமைச்சு அல்லது வேறு அரச நிறுவனங்களுக்கு விடுவிக்க முடியாது எனினும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி ரூபா 338,385 தொகை பெறுமதியான 02 மோட்டார் சைக்கிள்கள் நிதி அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக சபையின் பதவியணியின் 10 அங்கத்தவர்கள் நிதி அமைச்சின் சேவைக்காக விடுவிக்கப்பட்டு வேதனமாக ரூபா 3,376,415 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

**4.11 பதவியணியின் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியினர் 298 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 287 தொகையாக 23 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் மிகையாகக் காணப்பட்ட பதவியணியினர் 11 தொகையாகும். எவ்வாறாயினும் 2017 பெப்ரவரி 28 திகதி அளவில் இந்த மிகை பதவியணியினர் 15 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) சபையினால் நாளது வரை ஆக்கப்பட்ட மனித வள திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் குறித்தொதுக்கிய கடமைகள் பங்கீடு செய்தல், நாளது வரையான பதவியணியினர் விபரம், பதவியணியினர் சிரேஷ்ட நிலை மற்றும் தகைமைகள் அடங்கிய தகவல்கள்,

பதவிவகிப்பவருக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் வழங்கியிருந்த பதவிகளின் எண்ணிக்கை நாளதுவரையாகும் முறை அடங்கிய தகவல்கள் முறைமையொன்று சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது முகாமையாளர் பதவிக்காக இரண்டாம் நிலை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் பல வருட காலமாக நிரந்தர அடிப்படையில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் உதவி பொது முகாமையாளர் (மனித வள), உதவி பொது முகாமையாளர்(பெறுகைகள்) ஆகிய பதவிகளுக்காக இது வரை ஆள் சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) வெற்றிடமாக காணப்படும் சபையின் மின்தொழில் தொழில்நுட்பவியலாளர், பதவிக்காக நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்ப்பதற்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன் சுமார் 10 வருட காலம் குறிப்பிட்ட பதவியில் கடமைகளை அணவல் செய்யும் நபர்களின் நியமனங்களை நிரந்தரமாக்குவதற்கு முறையான நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(உ) முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 04 ஆலோசகர் பதவிகள், சட்ட உத்தியோகத்தர் பதவியொன்று, 06 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், 09 அலுவலக உதவியாளரின் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். ஆலோசகர் பதவிக்காக சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் 03 பேர் நிதி அமைச்சின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் படியாக ஒரு நபருக்கு மாதம் ரூபா 100,000 வீதம் சபையினால் செலுத்தப்பட்டு வருகின்றது.

மேலும், 03 விற்பனை உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் கணக்கு உத்தியோகத்தர் பதவி ஒன்றிற்கான வெற்றிடங்களுக்காக உள்ளக பதவி உயர்வுகளின் மூலம் ஆள் சேர்ப்பதற்கு 2016 ஜூன் 13 திகதி விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டிருந்தன. விண்ணப்பங்கள் அழைக்கப்பட்ட இறுதித் திகதியாகிய 2016 ஜூன் 13 திகதியின் பின்னர் மேலும் விற்பனை உத்தியோகத்தர் மற்றும் கணக்கு உத்தியோகத்தர் 3 வீதம் 6 பேர் சேர்ப்பதற்காக 2016 ஜூன் 30 திகதி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றிருந்தது. இந்த பதவிகளுக்காக மீண்டும் விண்ணப்பங்கள் அழைக்கப்படாமல் 2016 ஜூன் 13 ஆம் திகதிய விண்ணப்பங்களின் மூலமே மேற்கூறிய 10 பதவிகளுக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டமையால் தகைமைகள் பூர்த்தி செய்திருந்த ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அந்த பதவி உயர்விற்காக விண்ணப்பம்

சமர்ப்பிப்பதற்காக இருந்த சந்தர்ப்பத்தை இழந்துள்ளது என அவதானிக்கப்பட்டது.

(ஊ) சேவை முறைமாற்றம் காத்திருக்கும் பதிவேடு ஒன்றின் மூலம் சபையின் சாரதிகளும் நியாயமாக வேலைகள் பகிர்வு செய்யும் நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்படவில்லை. சபையினால் 35 சாரதிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் போக்குவரத்து பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் அவர்களில் 20 பேரையும் சேவை முறை காத்திருக்கும் பதிவேடு தயாரிக்கும் போது சம்பந்தப்படுத்தியிருக்கவில்லை.

(எ) விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் மற்றும் விற்பனை கூட்டிணைப்பாளர் 2 பதவிகளுக்காகவும் ஒரே தன்மையுள்ள கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன் அந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள் மற்றும் சம்பள நிலை வெவ்வேறாக தீர்மானிக்கப்பட்டு இருந்த போதிலும் விற்பனை கூட்டிணைப்பாளர் ஆட்சேர்ப்பு திட்டமொன்று அங்கீகரித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டமொன்று அங்கீகரிக்காமல் ஆட்சேர்க்கப்பட்டிருந்த விற்பனை கூட்டிணைப்பாளர் பதவிகளின் எண்ணிக்கை 14 ஆகும்.

## 4.12 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 10,098,026 கிரயத்தையுடைய கொள்வனவு செய்திருந்த காலம் முதல் சபையின் தலைவர்களினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வாகனம் 2015 நவம்பர் முதல் தலைவரின் பாவனை பொருத்தமற்றதென அறிவித்திருந்ததுடன் 2015 நவம்பர் 15 திகதி அகற்றுவதற்கான திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றிருந்தது. இந்த அங்கீகாரத்தை பெற்ற பின்னரும் இந்த வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் முறையான கவனம் இன்றி ஓட்டிய காரணத்தினால் மொத்தமாக சுமார் ரூபா 1,167,437 தொகைக்கான திருத்த வேலைகள் ஏற்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக அகற்றுவதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த உரிய பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கு சபைக்கு இருந்த சந்தர்ப்பத்தை தொடர்ந்தும் இழந்துள்ளது.

(ஆ) ஒதுக்கப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் 5 உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கியிருந்த வாகனங்கள் தவிர தொகுதி வாகனங்களையும்

பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு ஓடிய தூரத்தின் அளவு சுமார் 3,731 கிலோமீற்றர் ஆக இருந்தன. அதற்காக ரூபா 74,796 இற்கான எரிபொருள் நுகரப்பட்டிருந்தது. அவ்வாறு தொகுதி வாகனங்கள் பயன்படுத்தும் தேவையினை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**4.13 சந்தையின் பங்கு**

அரச சார்பாக லொத்தர்கள் நடத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியவற்றினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் போது லொத்தர் விற்பனைக்காக அளித்துள்ள பங்களிப்பு தொடர்பாக விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | லொத்தர் விற்பனை வருமானம் | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி லொத்தர் சபை | தேசிய லொத்தர் சபை | அபிவிருத்தி லொத்தர் சபையின் சந்தையின் பங்கு (சதவீதம்) |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2016 | 15,314 | 20,170 | 43 |
| 2015 | 12,280 | 17,394 | 41 |
| 2014 | 12,232 | 15,153 | 45 |
| 2013 | 10,611 | 14,537 | 42 |
| 2012 | 10,668 | 12,024 | 47 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அபிவிருத்தி லொத்தர் சபையின் சந்தையின் பங்கு தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சந்தையின் பங்குடன் இணைக்கஞ் செய்த போது 50 சதவீதத்தை விட குறைந்த பெறுமதியினையே பெற்றிருந்தது.

(ஆ) 2012 ஆண்டின் போது 47 சதவீதமாகிய சபையின் சந்தைப் பங்கு 2016 ஆண்டின் போது 43 சதவீதம் வரை கீழிறங்கியிருந்ததுடன் 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான ஒட்டுமொத்த காலப்பகுதியில் 47 சதவீதம் முதல் 41 சதவீதம் வரையான வீச்சில் தளம்பிய நிலையில் காணப்பட்டது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிச் சுற்றறிக்கையில் 5.1.2 பந்தியின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தில் திட்டமிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்கான எதிர்பார்த்த குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் அதற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய முகாமைத்துவம் என்பவற்றை தெளிவாக இனங்காணக்கூடிய விதமாக செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என அறவிடப்பட்டிருந்தது. எனினும், சபையின் 2016 முதல் 2020 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான ஆண்டுகளின் போது சபையினால் நெருங்குவதற்கு திட்டமிட்டிருந்த இலக்குகளின் மதிப்பீட்டு பெறுமதிகள், கிரயங்கள், காலப்பகுதிகள் என்பன உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்திருந்த குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் தொடர்புடைய பொறுப்புச் சொல்ல வேண்டிய முகாமைத்துவம் பற்றிய தகவல்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 9.2 பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் போது நிறுவனத்தின் தேவையின் அடிப்படையில் மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் சபையினால் அதனைத் தயாரித்திருக்கவில்லை.

(ஈ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 5.1.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டிய சபைக்கு சொந்தமான வளங்கள் தொடர்பாக மற்றும் செயலாற்றுகை சுட்டிகள் தொடர்பான தகவல்கள் உட்படுத்தியிருக்கவில்லை.

**5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆண்டின் செயற்படுத்துவதற்காக உத்தேசித்த இலக்குகள் அவற்றிற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள், மதிப்பீட்டு எண்ணிக்கை மற்றும் கிரயங்கள் மற்றும் அதற்கான காலப்பகுதி உட்படக்கூடிய விதமாக 2016 ஆண்டிற்காக சபையினால் செயல்நடவடிக்கைத் திட்டம் விரிவாக

தயாரிகப்பட்டிருக்கவில்லை. மேலும் சபையின் கூட்டிணைந்த திட்டத்திற்கு மற்றும் வருடாந்த பாதீட்டுடன் ஒன்றாக போகின்ற செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்படாததுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் முன்னேற்றம் காலத்திற்கு ஏற்ப பரிசோதனை மேற்கொள்வதற்காக பொருத்தமான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் விற்பனை கூடங்கள் நிர்மானித்தல், விநியோகம், பெறுமதி மற்றும் எண்ணிக்கைகள் உடன் குறித்தொதுக்கிய இலக்கு ஒன்று காட்டப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பெறுகைகள் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4 ஆம் அத்தியாயம் 4.2.1 பந்தியின் பிரகாரம் பெறுகைகள் கைநூலில் வழங்கியிருந்த படிவத்தின் பிரகாரம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் சபையினால் அவ்வாறு விரிவான பெறுகைகள் திட்டமொன்று (Detail Procument Plan) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலே (அ) பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு பெறுகைகள் திட்டத்தில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருக்கவில்லை.

(i) பெறுகைகள் வகை(Procument Category)

(ii) பெறுகைகள் முறை (Procument Method)

(iii) பெறுகைகள் விடயங்களை ஆரம்பிப்பதற்கு மற்றும் முடிப்பதற்கான அட்டவணையிடப்பட்ட குறித்தொதுக்கிய நாட்கள்.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

சபையில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு 05 பேர்கள் அடங்கிய பதவியணியொன்று இணைக்கப்பட்டிருந்த போதிலும், போதியளவான பதவியணியொன்று காணப்படாமையின் காரணமாக நிதி, விற்பனை மற்றும் நிருவாகம் ஆகிய பரப்புக்களில் ஆக்கபூர்வமான கணக்காய்வு ஒன்று மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் 5.2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்த பாதீட்டுடன் காணப்பட்ட வேலை பாதீட்டு ஐந்தொகை தயாரித்து கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

**5.6 கணனி மயப்பட்ட முறைமைகள் நிறுவுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் லொத்தர் பரிசு இழுப்பதற்காக தற்போது பயன்படுத்தப்படும் கணனி மென்பொருள் சேவை தனியார் கம்பனி ஒன்றில் இருந்து பெற்றிருந்ததுடன் அதற்காக முறையான உடன்படிக்கையொன்று காணப்படவில்லை. அதன் பிரகாரம் லொத்தர் பரிசு இழுப்பதற்கான தரவுகளின் உட்புகுதல் முற்றாக குறிப்பிட்ட கம்பனிக்கு சாட்டப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்படும் ஆபத்து நிலைமையை சபை கவனம் செலுத்தியுள்ள தொகையும் மற்றும் மென்பொருளின் விடயங்களுக்காக சபையின் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது எனவும் அவதானிக்கப்படவில்லை. இந்த கணனி மென்பொருளை பராமரித்தல் மற்றும் அது தொடர்புடைய விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 9,345,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தச் செலவு ரூபா 92,988,744 தொகையாகும்.

(ஆ) லொத்தர் பரிசு இழுத்தல், கணக்கீடு மற்றும் விற்பனவுகளுடன் தொடர்புடைய கணனி முறைமைகள் உட்பட ஒன்றித்த கணனி மயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்று சபையில் காணப்படாமையால் நிதி மற்றும் விற்பனை பிரிவு தகவல்களிடையே கூட்டிணைப்பு ஒன்று ஏற்பட்டிருக்கவில்லை. மேலும், உதவி பொதுமுகாமையாளர் ஒருவருடன் 3 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது நிறுவப்பட்டிருந்த தகவல் தொழில்நுட்ப பிரிவுகளில் ரூபா 3,337,382 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் போதியளவான நலன்கள் சபைக்குக் கிடைத்திருக்கவில்லை.

**5.7 சுற்றாடல், பொருளாதார மற்றும் சமூகம்சார் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசு சார்பாக லொத்தர் நடத்துதல் மற்றும் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்குதல் சபையின் பொறுப்பாக இருந்த போதிலும், பல்வேறு

காரணங்களினால் உரிமை கோரப்படாத பரிசு தொகைகளாகிய பரிசுகள் பெறுவோர் தொடர்பாக தொடர்செயல் நடவடிக்கை ஏதும் சபையினால் மேற்கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக 06 மாதங்ளை கடந்துள்ள உரிமை கோரப்படாத மொத்தப் பரிசுத் தொகையும் சபையின் வருமானத்திற்கு எடுத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவ்வாறு வருமானத்திற்கு எடுத்திருந்த ரூபா 284 மில்லியன் தொகை உட்பட 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை அவ்வாறு வருமானத்திற்கு எடுத்திருந்த தொகை ரூபா 1214 மில்லியன் ஆகும்.

(ஆ) மீளாண்டின் போது சபையினால் 851 தடவைகள் லொத்தர் சீட்டிழுப்பு குலுக்கல் நடத்தியிருந்ததுடன் 793 தடவைகளிலும் கணக்காய்வாளர் ஒருவரை மேற்பார்வைக்கு அழைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், சபையினால் நடாத்தப்படும் லொத்தர் பரிசு இழுத்தல் முறைசார் விதமாக மற்றும் வெளிப்படையான தன்மையுடன் சமூக பொறுப்புக்கள் நிறைவேற்றக் கூடிய விதமாக நடைபெற்றனவா என கணக்கய்வின் போது கேள்விக்குரியான காரணமாகியுள்ளது.

(இ) சபையினால் மீளாய்வாண்டின் போது பரிசுகள் வழங்கப்பட்டிருந்த லொத்தர்களின் எண்ணிக்கை ரூபா 184,040,754 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் 99.69 சதவீதம் எனப்படும் ரூபா 183,482,914 தொகையான லொத்தர்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. ரூபா 20 முதல் 200 வரையான வீச்சில் பரிசுகளேயாகும். அந்த வீச்சிலும் 89 சதவீதம் 20 ரூபா வீதமான பரிசுளாகும். ரூபா 20 களுக்கான பரிசுகளுக்காக மீண்டும் டிக்கர் எடுப்பதை ஊக்குவித்தல் குறிப்பிட்ட பரிசு வெற்றி பெற்றவர்கள் கவனம் செலுத்தாமை அதனை சபையின் சார்பாக பார்த்த போது இலாபத்தன்மையை உயர்ததுவதற்காக பலமான காரணி ஒன்றாக இருக்க முடியுமென அவதானிக்கப்பட்டது. எனினும் பொதுமக்கள் சார்பாக பார்க்கும் போது அத்தீர்மானத்தின் ஊடாக பொருளாதார மற்றும் சமூக பொறுப்பு உயர்ந்த மட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதென அவதானிக்கப்படவில்லை.

(ஈ) 04 லொத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது பரிசு இழுக்கும் இயந்திரத்திற்கு போடப்பட்டு இலக்கம், எழுத்துறு அல்லது இலக்கிணம் ஆகிய பந்துகளுக்கு தொடர்பாக அச்சிடப்பட வேண்டிய டிக்கட்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றி பெறும் தடவை ஒன்று தொடர்பாக அச்சிடப்பட்ட டிக்கட்களின் எண்ணிக்கையிடையே பாரிய முரணொன்று காணப்பட்டது. அதன் பிரகாரம் சீட்டிழுப்பு முறையொன்று தொடர்பாக அச்சிடப்பட்ட டிக்கட் ஒன்றேனும் காணப்படாமைக்கான சாத்தியக்கூறு விகிதாசாரம் 72 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. பந்துகளின் எண்ணிக்கையுடன் அச்சிட வேண்டிய

டிக்கட்களின் எண்ணிக்கையை பரிசுகள் உடைய டிக்கட்களின் எண்ணிக்கையுடன் இணக்கஞ் செய்த போது பரிசுகள் உடைய டிக்கட்கள் அல்லாமல் இருக்கும் சாத்தியக்கூறு 91.77 முதல் 99.60 சதவீதம் வரை வீச்சில் இருந்த காரணத்தினால் சபையின் சமூகம்சார் பொறுப்பு போதியளவானதாக நிறைவேற்றப்பட்டுள்ளனவா என கேள்விக்குறிக்குரிய விடயமாகும்.

**5.8 சனாதிபதி நிதியத்திற்கு சபையின் பங்களிப்பு**

2017 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்குரிய சமர்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு உண்மையாகவே சபைக்கு பெற்றுக் கொண்டிருந்த விற்பனைக் கூடச் செலவுகளின் விரிவான அட்டவணை ஒன்றின் மூலம் அட்டுறு செலவு என காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சனாதிபதி நிதியத்திற்கு சபையின் பங்களிப்பு ரூபா 7,606,870 இனால் குறைந்திருந்ததென கணக்காய்வில் சுட்டிக்காட்டியிருந்தமையால் சரிசெய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2017 அக்தோபர் 04 திகதி மீண்டும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது. அங்கு மேற்கூறப்பட்ட பெறுமதி பதிவு செய்தல் தவறு என நாள்வழிக் குறிப்பு மூலம் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தமையால் சனாதிபதி நிதியகத்தின் பங்களிப்பு அப்பெறுமதியினால் அதிகரித்திருந்தது.

| | ரூபா |
|---|---|
| 408 விற்பனைக் கூடங்களுக்கான நேர் பண்ட கிரயம் | 6,120,000 |
| விற்பனைக் கூடங்களுக்கான ஸ்டிகர் பண்ணும் செலவு | 90,000 |
| டிஜியல் அச்சு மற்றும் கணனி மயப்படுத்தல் | 3,120 |
| பிரச்சார மற்றும் அச்சு செலவு | 16,750 |
| 30 விற்பனைக் கூடங்களுக்காக செலுத்த வேண்டிய தொகை | 1,350,000 |
| | 7,579,870 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 27,000 |
| | 7,606,870 |

இந்த நிலையான கொடுக்கல் வாங்கல்களின் மூலம் தோன்றிய விளைகளை மிகைத்த சனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு கூட்டிக் குறைப்பதற்காக போலியான பதிவுகள் செய்தல் மற்றும் அபிவிருந்தி லொத்தர் சபை சட்டத்தின் 18(2) பிரிவிற்கு முரணாக செயல்படல் என கணக்காய்வில் அகற்ற முடியாதுள்ளது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) விற்பனை மேம்படுத்தல் விடயங்களுக்காக பேணப்பட்டிருந்த பேரேடுகளில் முகவர்களுக்கு வழங்கப்படும் பரிசுகள், வெற்றியாளர்களுக்கு வழங்கும் பரிசுகள், நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் பண்டங்கள் ஆகிய அனைத்து வழங்களும் உட்படுத்தப்பட்டமையால் அப்பேரேடு முறையற்ற விதமாக பேணப்படாமை. |
| | (ii) கணக்குப் பகுதியில் காணப்படும் விற்பனவு மேம்படுத்தல் விடய உப பேரேட்டில் காட்டப்படும் மீதிகள் பிரதான பேரேட்டில் பதிவு செய்திருந்த போதிலும் அவற்றை இலகுவாக இனங் காண்பதற்கான நடைமுறை ஒன்றில் கடைபிடிக்காமல் மற்றும் அந்த உப பேரேட்டில், அலகு பெறுமதியும் உற்படுத்தியிருக்காமை. |
| | (iii) கிடைக்கப்படாத பணத்தினை பணம் கிடைத்ததென காசேட்டில் பதிவு செய்தல் மற்றும் கிடைத்த பணம், காசேட்டில் பதிவு செய்தல் விடயங்கள் தாமதமாக நடைபெற்றமை. |
| (ஆ) மனிதவள முகாமைத்துவம் | (i) ஆட்சேர்ப்பு திட்டத்தினை முறைப்பிரகாரம் அங்கீகரிக்காமல் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளல். |

38

AGDSL

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| | | |
|---|---|---|
| | (ii) | பெறுகைகள் விவகாரங்கள், கட்டிடங்களின் பராமரிப்பு விவகாரங்கள், வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளல், வாகன விற்பனவுகள் ஆகிய அனைத்து கருமங்களும் நிருவாக உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக பொருத்தமான விதத்தில் வேலைப் பகிர்வு ஒன்று காணப்படாமை. |
